Registered as a news paper. பக்கங்கள்: எட்டு விலை: ரூபா 6.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

ஆசியாவின் நம்பர் 1 சீமேந்து
SLS 107 அங்கீகாரம் பெற்றது.
ISO 9002 தரம் பெற்றது.
BSS 12 - 1991 தரத்திற்கு அமைவானது.
இவை அனைத்தையும் கொண்ட உயர்தர சீமேந்து.
ரா ம் கோ ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
சீமேந்து
(சி-1147)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 ஆனி 23 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 அவ்வல் 7 (08.07.2003) செவ்வாய்க்கிழமை இதழ்: 279

யாழ்.மாவட்ட புனர்வாழ்வு செயற்திட்டங்களில்

# பல கோடி ரூபா நிதி மோசடி; சி.ஐ.டி. விசாரணை ஆரம்பம்!

## அதிகாரிகள் பலர் சிக்கலாம்!

(யாழ்ப்பாணம்)

**யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட புனர்வாழ்வுப் பணிகளில் இடம் பெற்ற பாரிய நிதிமோசடிகள் தொடர்பான இரகசியப் பொலிஸாரின் விசாரணைகள் முழுவீச்சில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.**

**கடந்த 2000 ஆம் ஆண்டு முதல் 2002 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதிகளில் - யாழ்.குடாநாட்டில் 'நான்' அமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு புனர்வாழ்வுத் திட்டங்களில் பாரிய நிதிமோசடிகள் இடம்பெற்றுள்ளதாக, கணக்காய்வு அறிக்கைகள் மூலம் தெரியவந்ததையடுத்தே, கொழும்பிலிருந்துவந்த சி.ஐ.டியினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.**

முதற்கட்டமாக பதின்நான்கு செயற்திட்டங்கள் தொடர்பான உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் படி நான்கு கோடி ரூபா நிதி மோசடி செய்யப்பட்டிருப்பது ஏற்கனவே அம்பலமாகியுள்ளது.

இந்த மோசடி தொடர்பாக, மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதற்காக -

கொழும்பு குற்றப் புலனாய்வுப் பொறுப்பதிகாரியான வலப்பிட்டிய, நேற்று யாழ்ப்பாணத்துக்கு திடீர் விஜயம் செய்தார்.

மேற்படி விசாரணைகளின் முதற்கட்டமாக, யாழ்.செயலக பிரதம எழுதுவினைஞரிடமிருந்து வாக்கு மூலம் பெறப்பட்டிருக்கிறது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவை வெளியேறுமாறு பிக்குகள் கோரிக்கை

(கொழும்பு)

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவை இலங்கையிலிருந்து வெளியேறுமாறு, தேசிய பிக்குமார் முன்னணி கோரிக்கை விடுத்துள்ளது.

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் கொழும்பிலுள்ள அலுவலகம் முன்பாக, ஒன்று திரண்ட தேசிய பிக்குமார் முன்னணியைச் சேர்ந்தவர்கள் - தங்களின் கோரிக்கை தொடர்பாக போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் மகஜர் ஒன்றினையும் கையளித்துள்ளனர்.

அண்மைக் காலமாக போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர், விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகவே செயற்பட்டு வருகின்றனர். இதனால், இவர்கள் - தொடர்ந்தும் இலங்கையில் இருப்பது பொருத்தமற்றது எனத் தெரிவித்தே தேசிய பிக்குமார் முன்னணியினர் மேற்படி கோரிக்கையை முன்வைத்துள்ளனர். (01)

## காரைநகர் கடற்படை முகாமருகே குண்டுவெடிப்பில் இளைஞன் பலி

(காரைநகர்)

காரைநகர் கடற்படைத்தளத்திற்கு அண்மையில் வெடிபொருள் வெடித்ததில், இளைஞர் ஒருவர் அந்த இடத்திலேயே பலியானார்.

நேற்றுமாலை 3.30 மணிக்கு காரைநகர் நீலங்காட்டில் இடம்பெற்ற இந்த சம்பவத்தில், இதே இடத்தைச் சேர்ந்த பொன்னுத்துரை ஜெயக்குமார் (வயது 26) என்பவரே மரணமடைந்தவராவார்.

இராணுவம் மற்றும் கடற்படையின் கட்டுப்பாட்டில் இருந்த இப்பகுதியில், அண்மையில்தான் பொது மக்கள் மீளக்குடியமர்வதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தனர். இந்தப் பகுதியில் நடமாடியவேளையிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

குண்டுவெடிப்பில், மேற்படி இளைஞன் அந்த இடத்திலேயே மரணமடைந்தார். தலை மற்றும் கைப் பகுதிகள் சிதைவடைந்து காணப்படும் இறந்தவரின் சடலம் உறவினர்

(10 ஆம் பக்கம் பார்க்க)

ஊழல் குற்றச்சாட்டின் அடிப்படையில்

## முன்னாள் அரசாங்க அதிபர் மீது நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல்!

(கொழும்பு)

யாழ்.மாவட்ட அரசாங்க அதிபராக கடமையாற்றிய கே.சண்முகநாதனுக்கு எதிராக, நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இவர் தமது பதவிக்காலத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்ட பணத்தில் நான்குகோடி ரூபாவை மோசடி செய்துள்ளதாகக் கூறி, கொழும்பு குற்றப்புலனாய்வுப் பிரிவு அதிகாரி வழக்குத் தொடுத்துள்ளார்.

சாவகச்சேரி நகரசபை மற்றும் கொக்குவில் சந்தைக் கட்டடங்களுக்காகவும், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் மாணவர் விடுதி ஒன்றினை அமைப்பதற்காகவும் வழங்கப்பட்ட காசோலைகளில் அரசாங்க அதிபர் தமது சிபார்சின்பேரில் மக்கள் வங்கிக்கு மாற்றீடு செய்துள்ளதாக குற்றப்பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு - 58 காசோலைகள் மாற்றப்பட்டிருப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## தலை ஒட்டிப் பிறந்த யுவதிகள் அறுவை சிகிச்சை மூலம் பிரிப்பு!

### சிங்கப்பூர் டொக்டர் குமார் சாதனை



தலையால் ஒட்டிப் பிறந்த 29 வயதான ஈரானைச் சேர்ந்த இரட்டைச் சகோதரிகள், சிங்கப்பூர் வைத்தியர்களின் வெற்றிகரமான அறுவைச் சிகிச்சை மூலம், நேற்றுத் தனிததனியாகப் பிரிக்கப்பட்டனர்.

இவர்களது தலையில் உள்ள மூளைப்பகுதிக்கு, தனியொரு நாடி மூலம் குருதி விநியோகம் நடைபெற்றது. வைத்தியர்கள் இந்த நாடியை இரண்டு தனித்தனியான நாடிகளாகப் பிரித்த பின்னர், தலையில் அறுவைச் சிகிச்சையை மேற்கொண்டு இருவரினதும் தலைகள் தனித்தனியாகப் பிரித்தெடுக்கப்பட்டன.

சிங்கப்பூர் **Raffles** வைத்தியசாலையில் இந்த சத்திரசிகிச்சை நடைபெற்றது. பிரதம அறுவைச் சிகிச்சை வைத்தியராக குமார் என்பவர் தொழிற்பட்டார்.

லாலே மற்றும் லாடன் என்ற இரு சகோதரிகளினதும் மூளை தனித் தனியாக - ஆனால், ஒரே மண்டையோட்டினுள் இருந்ததும், இரு மூளைகளுக்கும் ஒருதனியான நாடியே குருதியை விநியோகித்ததும் - இவர்களை இதுவரை சத்திரசிகிச்சை மூலம் பிரிக்கமுடியாமல் இருந்தமைக்குக் காரணமாகும்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

குடாநாட்டின் நிலைமையை அவதானிக்க

## அமெரிக்க இராணுவ நிபுணர் இன்று யாழ்ப்பாணம் வருகிறார்!

(கொழும்பு)

அமெரிக்காவின் உயர்மட்ட இராணுவ நிபுணர் ஒருவர் இன்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவுள்ளார்.

நீண்டகால யுத்தத்துக்குப் பின்னர் - யாழ்ப்பாணக் குடாநாட்டின் நிலைகுறித்து அறிந்து கொள்ளவும், யுத்த நடவடிக்கைகள் காரணமாக ஏற்பட்ட பின்விளைவுகள் குறித்து ஆராய்வதற்காகவுமே அமெரிக்க இராணுவ நிபுணர் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவிருக்கிறார்.

வில்லியம் நீட் என்ற இந்த இராணுவ நிபுணருடன் டெபோரா லெட்லின்ட் என்ற பெண் அதிகாரியும் இங்கு வருகைதரவுள்ளார். இவர்கள் யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று, நிலைமைகளை நேரில் அவதானிக்கவுள்ளனர்.

அனேகமாக, கண்ணிவெடி அகற்றப்படும் பகுதிகளுக்கு இவர்கள் இருவரும விஜயம் செய்யவுள்ளனர் எனவும், பின்னர் அரச அதிபர் செ. பத்மநாதனையும் சந்தித்துப் பேசவுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (க)

### விண்ணாணம் விநாசியர்



தோண்டத் தோண்ட இன்னும் பூதம் கிளம்புமோ....?

## அமெரிக்கத் தூதரகக் குழு யாழ்ப்பாணம் வந்துள்ளது!

(யாழ்ப்பாணம்)

அமெரிக்கத் தூதரகத்தின் பிரதி ராஜாங்கச் செயலாளர் தலைமையிலான குழுவொன்று யாழ்ப்பாணத்திற்கு வந்துள்ளது.

கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகப் பிரதி ராஜாங்கச் செயலாளராகவும், தற்போது இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவராக பதில் கடமையாற்றி வருபவருமாகிய டொனால்ட் காம் என்பவர் தலைமையில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருக்கும் இக்குழுவில், கிறிஸ் லோங், பத்மினி இராஜதுரை ஆகியோரும் அடங்கியுள்ளனர்.

மூன்று நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு யாழ்ப்பாணம் வருகை

(10 ஆம் பக்கம் பார்க்க)

Expo Aviation (Pvt) Ltd.
EXPO Aviation
எக்ஸ்போ
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 071 349999
071 348888 074 ~ 512666 ~ 01 ~ 360290
(சி -975)

"We are going" Party - 2003

**Faculty of Management Studies and Commerce**

எதிர்வரும் வியாழக்கிழமை (10.07.2003) நடைபெறவுள்ள மேற்படி நிகழ்வு தொடர்பான அவசர கலந்துரையாடல் இன்று நடைபெறவுள்ளதால், இறுதிவருட முகாமைத்துவ, வணிக மாணவர்கள் அனைவரும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

இடம் :- CH2

காலம்:- 08.07.2003 மு.ப. 11.00

★ வரும்போது புகைப்படங்களுடன் வரவும்.

(410) - ஒழுங்கமைப்புக்குழு.

# இலங்கை வங்கி அறிவித்தல்

## திருமதி இராதாகிருஷ்ணன் வடிவாம்பாள்

முகவரி 1: "சோலை வித்தியாலய வீதி, யாழ்ப்பாணம்".

முகவரி 2: 238/1, காலி வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு-3

என்பவரை அவரது வங்கிக் கணக்கு சம்பந்தமாக உடனடியாக எங்களுடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

உதவிப் பொதுமுகாமையாளர்,
வடபிராந்தியம்,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல.
222 6095
222 3126
222 2735

(சி-1207)

# அரசாங்க அறிவித்தல்

## வாக்காளர் இடாப்பு திருத்தம் - 2003

(1) 1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க வாக்காளர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் 12 (1) ஆம் பிரிவின்படி 2003 ஆம் ஆண்டுக்குரிய வாக்காளர் பதிவேடுகளின் திருத்தம் ஆரம்பமாகிவிட்டதென்று இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

(2) தற்சமயம் நடைமுறையிலிருக்கும் வாக்காளர் பதிவேடுகளின் பிரதிகள் அல்லது அவற்றின் பாகங்கள் பதியும் அலுவலர்களால் கீழ்க்கானும் அலுவலகங்களில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

| பதிவேடுகள் அல்லது அவற்றின் பாகங்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ள அலுவலகங்கள் | பார்வைக்கு வைக்கப்படும் பதிவேடுகள் அல்லது அவற்றின் பாகங்கள். |
|---|---|
| 2.1 மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம் | அரசாங்க அதிபர் அம்மாவட்டத்திற்குப் பதியும் அலுவலராயிருக்கும் அந்தத் தேர்தல் மாவட்டங்களுக்கான பூரணமான வாக்காளர் பதிவேட்டுப் பிரதி. |
| 2.2 பிரதேச செயலகம்/உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் | பிரதேச செயலகப் பிரிவு அடங்கிய பகுதியிலுள்ள வாக்காளர் பெயர்களடங்கிய பதி வேட்டின் பாகங்கள். |
| 2.3 மாநகர/நகர/பிரதேச சபை அலுவலகங்கள் | மாநகர சபைகள், நகர சபைகள் பிரதேசங்களினுள் வதியும் சகல வாக்காளர்களினதும் பெயர்கள் அடங்கிய இடாப்பின் பாகங்கள். |
| 2.4 ஒவ்வொரு கிராம அலுவலர்களின் அலுவலகம் | கிராம அலுவலர் பிரிவிற்குள்ளிருக்கும் எல்லா வாக்காளர்களினதும் பெயர்கள் அடங்கிய இடாப்பின் பாகங்கள். |

(3) ஏதாவதொரு தேர்தல் மாவட்டத்தில் ஒரு வாக்காளராகக் தகுதியுள்ள ஒவ்வொருவரும், வாக்காளர் இடாப்பில் தமது பெயர் பதியப்பட்டிருக்கிறதா என்று மேலே குறிப்பிட்ட அலுவலகங்களில் பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள வாக்காளர் இடாப்புக்களைப் பார்வையிடுவதன் மூலம் நிச்சயப்படுத்திக் கொள்ளலாம்.

4.1) வாக்காளர் இடாப்பை அல்லது அதன் பொருத்தமான பாகத்தைப் பரிசீலனை செய்து தமது பெயர் அவ்விடாப்பில் பதியப்படவில்லை எனக் காணும் ஒவ்வொருவரும்,

4.2) 2003 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 01 ஆம் திகதி 18 அல்லது அதற்கு மேற்பட்ட வயதினையுடைய ஒவ்வொருவரும்,

(5) தத்தமது பகுதி கிராம அலுவலரிடம் 01.07.2003 தொடக்கம் 15.08.2003 ஆம் திகதி வரை இவற்றுக்கான விண்ணப்பங்களைப் பெற்று பூரணப்படுத்தி, அவற்றினை மீளக் கிராம அலுவலரிடம் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தேர்தல்கள் அலுவலகம்,
மாவட்ட செயலகம்,
யாழ்ப்பாணம்.

(சி-1201)

பதிவு அலுவலர்,
தேர்தல் மாவட்டம் இல.10,
யாழ்ப்பாணம்.



விவசாயப் பெருமக்களே !

சைவ உணவக உரிமையாளர்களே!

ஆயுர்வேத வைத்திய சிகாமணிகளே!

எமது ஸ்தாபனத்திற்கு ஒருமுறை விஜயம் செய்யுங்கள்

**எம்மிடம்**

- நெல் குற்றும் இயந்திரம்.
- உமி நீக்கும் இயந்திரம் (China).
- அரிசி பொலிசர் (China).
- மிளகாய், உழுந்து, கோப்பி அரைக்கும் (நவீன் கெனடி பிராண்ட்) உலகப் பிரசித்திபெற்ற இயந்திரம்.
- எந்த விதமான கடின உழைப்பிற்கும் அதிசக்திவாய்ந்த (லிஸ்ரரைப்) டீசல் என்ஜின் (கெனடி நவீன்) மாக் 20H.P. 10H.P. குதிரைசக்தி கொண்டவை. பெற்றரைப் 25 H.P. 15 H.P. 7 1/2 H.P. 6 H.P. (குதிரை சக்தி) கொண்டவை. விசை கூடிய என்ஜின் (கெனடி நவீன்) R.P.M. 1500.
- கோப்பி அரைக்கும் இயந்திரம். சைவ உணவகத்துக்கு உழுந்து, சட்னி, சம்பல் போன்று நீர்சேர்த்து அரைப்பதற்கு கெனடி நவீன் ஈர அரையல் இயந்திரம். 2, 3, 5, 7 1/2, 10, 15, 20 கிலோ வரை அரைக்கும் அளவுகளில் உண்டு. இவற்றில் மருந்து மூலிகைகளும் அரைக்க முடிவதால் வைத்திய சிகாமணிகளுக்கும் உகந்தது.
- ஈர அரிசி அரைக்கும் China மில். 17, 23, 37, 42 போன்ற தங்கள் தேவைக்கேற்ப அளவுகளில் இயந்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். இவற்றுக்கான சகல உதிரிப்பாகங்கள் றபர், ரோமம் ஆகியவற்றால் உருவாக்கப்பட்ட பட்டிவகைகள் எல்லா அளவுகளிலும் "V" பெல்ட் (பட்டி) வகைகள். றபர் ஹோஸ், கிறைண்டர் பிளேற், சல்லடை வகைகள், மோட்டார் ஸ்ராட்டர் எல்லாம் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ளளாம்.
- வங்கிக் கடன் வசதி அல்லது குத்தகை வசதி தேவையானால் ஒழுங்கு செய்து தரப்படும். (40% வரை)

**நேரில் வரவும்**

ஏக இறக்குமதியாளரும் விநியோகஸ்தரும்

ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டஸ்

212, K.K.S வீதி, யாழ்ப்பாணம். 021-2225542

# சமுத்திரா

ரேட்ஸ் லிமிட்டட்

117 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

☎ : 021 - 222 2938

(சி-1204)

# அரசியல் சர்ச்சையை ஒதுக்கிவைத்துவிட்டு பிரச்சினைகளின் தீர்வுக்கு உதவவேண்டும்

## ஜனாதிபதி சந்திரிகாவுக்கு பிரதமர் ரணில் அழைப்பு

(கொழும்பு)

அரசியல் சர்சைகளா அல்லது நாட்டின் அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதா இன்று முக்கியம் என்பதை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும், அவரது கட்சியும் முடிவுசெய்யவேண்டும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நாடு இன்றுள்ள நிலையில், கட்சிகள் தமக்கிடையிலான அரசியல் சர்சைகள் எல்லாவற்றையும் ஓரம்கட்டிவிட்டு, நாட்டின் தேசியமுக்கியத்துவம் வாய்ந்த அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்க்க முன்வரவேண்டும்.

இப்போது - ஜனாதிபதியும், அரசாங்கமும் வெவ்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்களாக இருப்பதால்தான்-



பிரச்சினைகள் ஏற்பட்டிருப்பதாகக்கூறி, அரசாங்கத்தைக் கலைக்கும் முயற்சிகள் நடக்கின்றன.

ஆனால் - முன்னர் ஜனாதிபதியும், அரசாங்கமும் ஒரேகட்சியில் இருந்தபோது, தீர்க்கமுடியாத பல பிரச்சினைகளை இப்போது, ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் தீர்த்து வைத்திருக்கிறது என்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்துள்ளார்.

# பூநகரி நோயாளர் நலன்கருதி அம்புலன்ஸ் வண்டி அன்பளிப்பு!

## கிளிநொச்சி தேசிய எழுச்சிப்பேரவை வழங்கியது

கரும்புலிகள் நாளை முன்னிட்டு கிளிநொச்சி தேசிய எழுச்சிப் பேரவை-பூநகரி தியாக தீபம் திலீபன் மருத்துவமனைக்கு அம்புலன்ஸ்வண்டி ஒன்றை கையளித்துள்ளது.

வீதிகள் ஒழுங்கின்மையாலும், போர் காரணமாக இடம்பெயர்ந்த, பூநகரி மருத்துவமனை - ஜெயபுரத்தில் இயங்கி வருவதாலும், பூநகரிப் பகுதி நோயாளர்களின் நலன்கருதி, இந்த அம்புலன்ஸ்வண்டி கையளிக்கப்பட்டிருக்கிறது.

அண்மையில் இப்பகுதியில் பாம்புக்கடிக்குள்ளான ஒருவரும், அவசர சிகிச்சை வழங்கப்படவேண்டிய இன்னொரு நோயாளியும் உடனடி மருத்துவ வசதிகளை வழங்க - போக்குவரத்து வசதிகள் இல்லாததால் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

இத்தகைய வீண் உயிரிழப்புக்களைத் தவிர்க்கும் நோக்குடனேயே தியாக தீபம் திலீபன் மருத்துவமனைக்கு - கிளிநொச்சி தேசிய எழுச்சிப் பேரவையினர் அம்புலன்ஸ் ஒன்றைக் கையளித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது



நெடுந்தீவில் கரும்புலிகளின் நினைவாக இடம்பெற்ற விளையாட்டு விழாவில், வெற்றி பெற்ற கழகத்துக்கான கிண்ணத்தினை நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

## ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத் துணைவேந்தர்

# மாணவர்களிடம் பலவந்தமாக கையொப்பம் திரட்டுகின்றாராம்!

## பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிக்கை

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக உபவேந்தர், தமது பதவியைத் தக்கவைத்துக் கொள்வதற்காக, மாணவர்களிடம் பலவந்தமாகக் கையொப்பம் திரட்டிவருவதாகக் குற்றஞ்சாட்டி, ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

பல்கலைக்கழக மாணவர்கள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் பலரும் - அவரை இந்தப் பதவியிலிருந்து நீக்குமாறு ஜனாதிபதியைக் கோரியுள்ளனர்.

கடந்த முதலாம் திகதி உபவேந்தருக்கு எதிராக அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்களும் ஊர்வலமொன்றையும் நடத்தினர்.

முழுநாடும் உபவேந்தரைப் பதவிநீக்கம் செய்யக்கோரும் இந்தத் தருணத்தில், உபவேந்தர் கடந்த 3 ஆம் திகதியிலிருந்து தமது பதவியைக் காப்பாற்றிக் கொள்ளச் சில மாணவர்களைப் பயன்படுத்தி, பலவந்தமாக மாணவர்களிடம் கையொப்பம் திரட்டி வருகிறார். பெரும்பான்மையான மாணவர்கள் இந்த நடவடிக்கையை நிராகரித்துள்ளனர். ஆனாலும், அவர்களை அச்சுறுத்திப் பலவந்தமாகக் கையொப்பம் திரட்டப்படுகிறது.

இது பற்றி மீரிஹான பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கொலைகாரர், ஊழல்வாதிகள் இப்போது நாடாளுமன்றில்!

## ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறுகிறார்

(கொழும்பு)

1977 ஆம் ஆண்டுக்குப் முன்னர் கொலைகளைச் செய்தவர்களும், ஊழல்களைப் புரிந்தவர்களும் நாடாளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்படுவது மிகக்குறைவாகவே இருந்தது. ஆனால், இன்று நிலைமை அவ்வாறு இல்லை என்று, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.

சிலாபத்தில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு, உரை நிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு குறிபபிட்டார். அங்கு அவர் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில்,

1977 ஆம் ஆண்டுக்கு முன்னர், அரசியலில் கொலையாளிகளுக்கோ, ஊழல் குற்றவாளிகளுக்கோ இடமிருக்கவில்லை. இப்போதிருப்பதைப் போனறு, பத்துக்கும் மேற்பட்ட ஊழல்களைப் புரிந்தவர்களையும் நாடாளுமன்றம் அங்கத்தவர்களாகக் கொண்டிருக்கவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# போராசிரியர் நெடுஞ்செழியன் தமிழகப் பொலிஸாரால் கைது!

(சென்னை)

தமிழ்நாட்டின் மீது இந்திய மத்திய அரசின் 50 ஆண்டுகளுக்கும் மேலான வல்லாதிக்கத்துக்கு எதிராக - தமிழ்நாடு விடுதலைப் போராட்டத்துக்கான செயற்திட்டங்களை உருவாக்கியதாகக்கூறி, தஞ்சை பேராசிரியரும் மூத்த தமிழறிஞருமான க.நெடுஞ்செழியனைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

59 வயதான பேராசியர் நெடுஞ்செழியன், பெங்களூரில் தமிழ்நாடு விடுதலை முன்னணி நிர்வாகிகள் சிலர் கைதுசெய்யப்பட்டதன் தொடர்ச்சியாகவே கைதுசெய்யப்பட்டிருப்பதகாகத் தமிழகப் பொலிஸார் தெரிவித்தனர்.

பேராசிரியர் நெடுஞ்செழியன் முன்னர், தடா சட்டத்தின் கீழ் ஆறு மாதங்கள் சிறைத்தண்டனை அனுபவித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# திமு.கவுடனான நேச உறவை பேணுவதே எதிர்கால இலக்கு!

## கட்சித் தொண்டர்களுக்கு வைகோ கடிதம்

(சென்னை)

தி.மு.க, ம.தி.மு.கவுக்கு இடையிலான நேச உறவைப் பேணிக் காக்கும் அணுகுமுறையை ம.தி.மு.க. பின்பற்றும், தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த நலன்களையும், உரிமைகளையும் பாதுகாக்கவும், திராவிட இயக்கத்துக்கு வலிமை சேர்க்கவும் உரிய நடவடிக்கைகளை ம.தி.மு.க. மேற்கொள்ளும் என்று, கடந்த மார்ச் மாதத்தில் நடந்த பொதுக்குழுவில் தீர்மானம் நிறைவேற்றினோம். அதுவே ம.தி.மு.கவின் எதிர்கால அரசியல் பயணத்துக்கான பாதை ஆகும். அதிலிருந்து இம்மியளவும் விலகமாட்டோம் என, ஓராண்டு கால சிறைவாசம் குறித்து தனது கட்சித் தொண்டர்களுக்கு ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஆதரித்துப் பேசியதற்காக, பொடா சட்டத்தின் கீழ் சிறைவாசத்தை அனுபவித்துவரும் மறுமலர்ச்சி தி.மு.க. பொதுச்செயலர் வைகோ, எழுதியுள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

உலைக்களத்து நெருப்பில் வார்க்கப்படுகிறேன்- கூர் ஏற்றப்படுகிறேன். பழுக்கக் காய்ச்சப்பட்ட நிலையில், விழுகிற சம்மட்டி அடிகள் தொடர்கின்றன. கொழுந்து விட்டெரிகிறது சோதனை எனும் நெருப்பு.

கடந்த ஆண்டு ஜூலை 11 ஆம் திகதி, சென்னை விமானநிலையத்தில் கைதுசெய்யப்பட்டேன். 12 ஆம் திகதி முதல் வேலூர் சிறைக் கொட்டடியில் வாசம். பன்னிரெண்டு மாதங்கள் கடந்துவிட்டன. ஏதோ நேற்று வந்ததுபோல் இருக்கிறது.

எனது வாழ்க்கைக் கலண்டரில் 356 நாள்கள் கிழிக்கப்பட்டுவிட்டன. எனது கலண்டரில் மீதம் இருப்பவை எத்தனையோ? யார் அறிவார்?

தோழர்களே! வேலூர்ச் சிறைவாச நாடகள், காலம் எனக்குக் கனிவுடன வழங்கிய வரப்பிரசாதம். கடுமையான குளிர் மாதங்களில் எந்த மருந்துக்கும் கட்டுப்படாத இருமலாலும், சளியினாலும் உடல்ரீதியாக, மிகவும் அவதிப்பட்டேன். வேலூர் வெயிலூராயிற்றே. கடந்த மூன்று மாதங்கள் உக்கிரமான அனலின் வீச்சு. பாலை வனத்து வெப்பம். ஆனால், எதுவும் கடுகளவுகூட எனக்கு வருத்தம் அளித்ததில்லை. ஆயாசம் அணுவளவும் என்னை அண்டியதில்லை. என்றுதான் விடுதலையோ என்று கணநேரம்கூட நான் அலுத்துக் கொண்டதில்லை. வேலூர் சிறை வாழ்க்கை பயன்தரும் அனுபவப்பாடமாயிற்று.



மோசமான இரவுகளிலும், நேர்காணல் இல்லாத பகல் பொழுதிலும் சிந்தனை, ஆழமான சிந்தனை, என்னை ஆட்கொண்டது.

என்னை நானே பரிசோதித்துக் கொண்டேன். எனது குறைகளை அலசினேன். நிதானமாக யோசிக்கவும், பக்குவப்படுத்திக் கொள்ளவும் இந்தத் தனிமை பெரிதும் பயன்பட்டது. இச்சிறையில் ஒருநாள்கூட நான் சோம்பிக்கிடந்ததில்லை. வாழா இருந்ததில்லை. ஆயிரக்கணக்கான கடிதங்கள் எழுதி அனுப்பினேன். ம.தி. மு.க. கட்டுக்கோப்பாக இயங்கியது.

தமிழர் உரிமை நலனுக்காகவே அர்ப்பணித்து வாழும் பழ.நெடுமாறனைச் சிறையில் பூட்டியதும், சுப. வீரபாண்டியன் உள்ளிட்ட வானம்பாடிகளைப் 'பொடா'வில் அடைத்ததும், பத்திரிகையாளர் நக்கீரன் கோபாலை வெஞ்சிறையில் தள்ளியதும் - ஜனநாயகக் கொலைகளாயின. திராவிட இயக்கத்துக்கு விரோதமான, மதவாதசக்திகளையும், அச்சக்திகளுக்குப் பக்கபலமாக, அரசு அதிகாரத்தைப் பயன்படுத்தி அராஜகம் புரியும் ஜெயலலிதா அரசையும் எதிர்த்து, திராவிட இயக்கத்துக்கு வலிமை சேர்ப்பது இன்றைய காலகட்டத்தில் இன்றியமையாதது என அவர் மேலும் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளன.

# சிற்றூழியர்களை பதவி உயர்த்தும் பரீட்சை முடிவுகள் வெளியாகின!

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு மாகாண மற்றும் மத்திய அரசாங்க சேவைகளிலுள்ள சிற்றூழியர்களை - எழுதுநர் - II 'ஆ' சேவை மற்றும் தட்டெழுத்தாளர் சேவை II 'ஆ' ஆகியவற்றுக்குப் பதவி உயர்த்துவதற்காக, நாடளாவியரீதியில் நடத்தப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சையின் பெறுபேறுகள் வெளியிடப்பட்டுள்ளன.

பரீட்சைத் திணைக்களத்தினால், வெளியிடப்பட்ட பரீட்சைப் பெறுபேறுகள் தொடர்பான விபரம் வடக்கு-கிழக்கு மாகாண, பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

வடக்கு - கிழக்கு மாகாணசபையில் கடமையாற்றும் 17 சிற்றூழியர்கள் இந்தப் பரீட்சையில் சித்தியடைந்திருப்பதாகத் தெரிய வருகிறது.

# அலுவலக கடமை நேரங்களில் பணிக்கு வராத கிராமஅலுவலர்!

## கடும் நடவடிக்கை எடுக்கப்போவதாக அமைச்சர் அறிவிப்பு

அலுவலக நேரங்களில் கடமைக்குச் சமுகமளிக்காத கிராம அலுவலர்களுக்கு எதிராகக் கடும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று உள்நாட்டலுவல்கள், உள்ளூராட்சி, மாகாணசபைகள் அமைச்சர், அமைச்சர் அலிக் அலுவிகார தெரிவித்துள்ளார்.

கிராம அலுவலர்கள் கடமை நேரத்தில் அலுவலகங்களில் இருப்பதில்லை என்று பல்வேறு பகுதிகளிலிருந்தும் பொதுமக்கள் தமக்கு முறைப்பாடு செய்திருப்பதாக, அமைச்சர் அலிக் அலுவிகார குறிப்பிட்டார்.

மேலும் இந்தப் புகார்கள் தொடர்பாக - ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு உரிய அதிகாரிகள் பணிக்கப்பட்டுள்ளனர். அமைச்சின் பணிப்பின் பேரில், உடனடியாக நடவடிக்கையில் இறங்கியுள்ள அதிகாரிகள்-கடமைக்கு உரியநேரங்களில் சமுகமளிக்காத கிராம அலுவலர்கள் பலரை இனங்கண்டுள்ளனர்.

இவ்வாறு இனங்காணப்பட்ட கிராம அலுவலர்கள் மீது, நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், அவர் மேலும் தெரிவித்தார்.

# யாழ்.சிறுவர் இல்லங்களில் மட்டும் இரண்டாயிரத்து ஐநூறுபேர் பராமரிப்பு!

## சிறுவர் பாதுகாப்புக்குழு இணைப்பாளர் தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் நாற்பதுக்கும் மேற்பட்ட சிறுவர் இல்லங்களில் இரண்டாயிரத்து ஐந்நூறுக்கும் அதிகமான சிறுவர்கள், பாராமரிக்கப்பட்டு வருகின்றபோதும், மூன்று சிறுவர் இல்லங்கள் மட்டுமே நன்னடத்தைச் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டு, சட்டதிட்டங்களுக்கு அமைவாகச் செயற்பட்டு வருகின்றதாக - யாழ்.மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழுவின் இணைப்பாளர் ஸ்ரீபன் தெரிவித்தார்.

ஏனைய சிறுவர் இல்லங்களில் காணப்படும் சில குறைபாடுகள் காரணமாக அவற்றைப் பதிவு செய்வதில் தயக்கங்காட்டி வருகின்றனர். முத்துத்தம்பி சைவச்சிறுவர் இல்லம், பரமானந்தா சிறுவர் இல்லம், இளவாலை சிறுவர் இல்லம் ஆகியவையே நன்னடத்தைச் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தில் பதிவுசெய்யப்படடு இயங்கி வருகின்றன. எனினும், எமது சிறுவர் பாதுகாப்புக் குழுவில் நாற்பது சிறுவர் இல்லங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இதுபோன்று பதிவுசெய்யப்படாத நிலையில் இயங்கிவருகின்ற ஏனைய சிறுவர் இல்லங்களும், தமது தேவைகளை நிறைவேற்றும் விதத்தில் பதிவுகளை மேற்கொள்ள முன்வர வேண்டும் எனவும் சிறுவர் பாதுகாப்புக்குழு இணைப்பாளர் மேலும் தெரிவித்தார். (111)

## சின்னஞ்சிறு செய்திகள்

### கடற்தொழிலாளர் சங்க பொதுக்கூட்டம்

(வடமராட்சி கிழக்கு)

நாகர்கோயில் கிழக்கு, கடற்தொழிலாளர் கூட்டுறவுச்சங்கத்தின் பொதுக்கூட்டம் - எதிர்வரும் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இப்பொதுக்கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெறவிருந்தபோதும், கோரம் இல்லாததால் கூட்டம் ரத்துச்செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (17)

### குரும்பகட்டி வைரவர் ஆலய சங்காபிஷேகம்

(வடமராட்சி கிழக்கு)

தென்புலோலி, குரும்பகட்டி வைரவர் ஆலயத்தின் சங்காபிஷேகம் இன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி, தொடர்ந்து 15 தினங்கள் நடைபெற்று, 22 ஆம் திகதி மகா சங்காபிஷேகமும் நடைபெறவுள்ளது.

அன்று வைரவர் சுவாமிக்கு விசேட அபிஷேகமும், ஆராதனைகளும் நடைபெற்று, சுவாமி வீதி ஊர்வலம் இடம்பெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (17)

### சந்நிதியான் ஆச்சிரம வாராந்த நிகழ்வு

சந்நிதியான் ஆச்சிரம கலை பண்பாட்டு பேரவையினால் வெள்ளிக்கிழமைதோறும் நடாத்தப்படும் வாராந்த நிகழ்வில், எதிர்வரும் வெள்ளிககிழமை காலை 10.30 மணிக்கு வல்வெட்டித்துறை சிதம்பரக் கல்லூரி மாணவர்களின் பேச்சு, பாட்டு, பண்ணிசை நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

இணுவில் மத்திய கல்லூரி மாணவன் கணேசதாஸ் விகர்ணன் "மணிவாசகர் வழங்கும் வாசகம்" எனும் விடயம் பற்றி சொற்பொழிவாற்றுவார்.

### அல்வாயில் பூரணை உற்சவம்

அலவாய் வேவிலந்தை ஸ்ரீமுத்து மாரி அம்மன் தேவஸ்தானப் பூரணை உற்சவம் - எதிர்வரும் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறுமென தேவஸ்தான பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (116)

### மோசமான நிலையில் வீதிகள்

அரியாலையிலுள்ள நொத்தாரிஸ் வீதி, ஏ.வி.றோட், திருமகள் வீதி, மலர்மகள் வீதி ஆகிய வீதிகள் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன. இதுவரை இவற்றைத் திருத்துவதற்கு எவ்வித நடவடிக்கைகளும் எடுக்காததால், பொது மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (55)

### விளையாட்டு விழா ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருந்த தேசிய விளையாட்டு விழா, வேறு இடத்துக்கு மாற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# ஆறுதிருமுருகன் கௌரவிப்பு; கல்வியியல் கல்லூரியில்!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் மூன்றாம் ஆண்டு நிறைவு நிகழ்வும், செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகனைக் கௌரவிக்கும் நிகழ்வும், நாளை மறுநாள் வியாழக்கிழமை மாலை 4.30 மணிக்கு கல்வியியற்கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது. வைத்திய கலாநிதி வை.தியாகராசா தலைமையில் நடைபெறவுள்ள மேற்படி நிகழ்வில்- வரவேற்புரையை ஆசிரியர் கே.சிவகுமாரனும், ஆசியுரையை ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர சுவாமிகளும், அருட்கவி சீ.விநாசித்தம்பியும் நிகழ்த்தவுள்ளனர்.

தொடர்ந்து வாழ்த்துரைகளை யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, பேராசிரியர் அ.சணமுகதாஸ், யாழ்.பல்கலைக்கழக வணிகத்துறைத் தலைவர் கே.தேவராஜா, ஆசிரியகல்வியாளர்கள் மு.ஆனந்தராசா, ஞா.கணேசநாதன், முகிழ்நிலை ஆசிரியர் சி.நவநீதன் ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர்.

# வடமராட்சி கிழக்கு பகுதிகளில் மகளிர் அமைப்பு அங்குரார்ப்பணம்

வடமராட்சி கிழக்கு, மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள மூன்று கிராமசேவகர் பிரிவுகளில் மகளிர் அமைப்புக்கள் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டன.

வெற்றிலைக்கேணி, போக்கறுப்பு, முள்ளியான் ஆகிய மூன்று கிராம அலுவலர் பிரிவுகளிலும் இந்த மகளிர் அமைப்புக்கள் அமைக்கப்பட்டன.

தாளையடி, மருதங்கேணி, உடுத்துறை, வத்திராயன், செம்பியன்பற்று தெற்கு, செம்பியன்பற்று வடக்கு ஆகிய ஆறு கிராம அலுவலர் பிரிவுகளிலும், மிகவிரைவில் மகளிர் அமைப்புக்கள் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (17)

# கைதடி - நாவற்குழி கடற்கரை வீதியூடாக பஸ் சேவையை விஸ்தரிக்குமாறு கோரிக்கை!

## போக்குவரத்துச்சபை முகாமையாளருக்கு மகஜர் சமர்ப்பிப்பு

கைதடி - நாவற்குழி கிராமத்திலிருந்து பாடசாலை செல்லும் மாணவர்கள், அரச ஊழியர்கள் நன்மை கருதி வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பஸ் சேவையை, கடற்கரை வீதிவரை விஸ்தரிக்கக்கோரி, மேற்படி பகுதி மக்கள் வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பொதுமுகாமையாளருக்கு மகஜர் ஒன்றை அனுப்பிவைத்துள்ளனர்.

இப்பகுதி மக்கள் சார்பில், உயிர்பபூககள் இளைஞர், யுவதிகள் கழகம இந்த மகஜரை அனுப்பிவைத்துள்ளது. இந்த மகஜரில் மேலும் தெரிவித்திருப்பதாவது - எமது கிராமத்திலுள்ள பொது அமைப்புக்களினூடாக எத்தனையோ தடவைகள் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதை அடுத்து, கடந்த நவம்பர் மாதம் தொடக்கம் கோகிலாக்கண்டி சந்திவரை - குறிப்பிட்ட சில பஸ் சேவைகள் மட்டும் நடத்தப்பட்டு வருகின்றன.

ஆனால், சேவை நேரங்கள் பணிகளுக்கு ஏற்றதாக அமையாததால், பாடசாலை மாணவர்கள், ஊழியர்கள் உட்படப் பயணிகள் அனைவரும் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர். மாணவர்கள், அரச ஊழியர்கள் எனத தினமும் நாற்பதுக்கு மேற்பட்டோர் இங்கிருந்து யாழ்.நகரப்பகுதிக்குப் பயணம் செய்கின்றனர். இதனைவிட கோகிலாக்கண்டி, தச்சன்தோப்பு, நாவற்குழி போன்ற கிராமங்களும் இப்பிரச்சினையை எதிர்நோக்குகின்றன.

எனவே, போக்குவரத்து வசதிகள் தொடர்பாக மேற்படி கிராம மக்கள் எதிர்நோக்கும் சிரமங்களைக் கவனத்திற்கொண்டு, வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பஸ்சேவையை, கடற்கரை வீதிவரை விஸ்தரிக்கும்படி கேட்கப்பட்டுள்ளது.

# கூட்டுறவு ஆண்டு விழாவையொட்டி மாணவர்களுக்கிடையே போட்டிகள்!

(நவக்கிரி)

சர்வதேச கூட்டுறவின் 81 ஆவது ஆண்டு நிறைவுதின விழாவை முன்னிட்டு, அச்சுவேலி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச்சங்கம் பாடசாலை மாணவர்களிடையே பேச்சுப்போட்டிகளை நடத்தத் திட்டமிட்டுள்ளது.

ஆண்டு 5 முதல் 13 வரையான மாணவர்கள் பங்குகொள்ளும் வகையில் - நான்கு பிரிவுகளாக நடைபெறவுள்ள இப்போட்டியில், பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் தத்தமது பாடசாலை அதிபர்களால் உறுதிப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர், 'பொது முகாமையாளர்' பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச்சங்கம், அச்சுவேலி எனும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

போட்டிக்கான நிபந்தனைகளை அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். ஒவ்வொரு பிரிவிலும் வெற்றிபெறும் முதல் மூன்று மாணவர்களுக்கும் பெறுமதிமிக்க பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.(128)



அண்மையில் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்ற 'சமாதானக் கட்டமைப்பில் - பெண்களின் பங்கு' என்ற பயிற்சிப்பட்டறையில் மல்லாகம் நீதிவான் நீதிமன்ற நீதிபதி சரோஜினி இளங்கோவன் உரையாற்று வதையும், கலாநிதி ஜஸ்மின் தம்பையா அருகில் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (78)


வாழ்க வளமுடன்

HAPPY BIRTHDAY

முதலாவது அகவையில்



பெயர் :ம.ஆகாஸ்
முகவரி:பூதவராயன் கோயில் ஒழுங்கை, பருத்தித்துறை.

இரண்டாவது அகவையில்

பெயர் :வி. அனோஜன்
முகவரி:அளம்பில் முல்லைத்தீவு.



நான்காவது அகவையில்



பெயர் :வி. வினோஜன்
முகவரி:அளம்பில் முல்லைத்தீவு.

நான்காவது அகவையில்

பெயர் :பா.லிபிந்தன்
முகவரி:பெரியதம்பிரான் வீதி, வண்ணார்பண்ணை.



பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

எனைமாட்சித்து ஆகியக் கண்ணும் வினைமாட்சி
இல்லார்கண் இல்லது அரண்

திருக்குறள்.

# நமது நோக்கு

## கண்ணோட்டம் மாறுமா?

உயர் பாதுகாப்பு வலயங்கள் - யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்களின் அன்றாட வாழ்வில் மிகவும் மோசமான விளைவுகளை ஏற்படுத்தியிருக்கின்றன.

குடாநாட்டு மக்களின் குடியிருப்புக்கள், விவசாய மற்றும் தொழில் முயற்சிக்கான இடங்களை ஆக்கிரமித்து நிற்கும் இந்த உயர் பாதுகாப்பு வலயங்களால் ஒரு இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் - இடம்பெயர் அவல வாழ்வுக்குள் தள்ளப்பட்டிருக்கின்றனர்.

உயர் பாதுகாப்பு வலயங்களை நீக்கி இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியமர்வுக்கு வழிசெய்யுமாறு - அரசாங்கத்திடம் கடந்த ஒரு வருடத்துக்கு மேலாக, கோரிக்கைகள் விடப்பட்டு வந்த போதும், இது குறித்து எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

உயர்பாதுகாப்பு வலயங்களை அகற்றுவதற்கோ, மக்களை இங்கு மீள்குடியமர்த்துவதற்கோ படைத்தரப்பு கடும் எதிர்ப்புத் தெரிவித்துவருகிறது.

இந்தப்பகுதிகளில் பொது மக்களை மீள்குடியமர்த்த வசதி செய்வதாக அரசாங்கத் தரப்பு - உறுதியளித்திருந்த போதும், இதுவரை இது செயல் வடிவம் பெறவில்லை.

படைத்தரப்பின் எதிர்ப்பினால் - உயர்பாதுகாப்பு வலயங்களாக - ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் வாழ்ந்த மக்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்ப முடியாமல் உள்ளனர்.

இவர்கள், தம்மை மீளக்குடியமர்த்துமாறுகோரி, பல்வேறு போராட்டங்களையும் நடத்தினர். இந்தப் போராட்டங்களின் உச்சவடிவமாக - அண்மையில் பொங்கு தமிழ் நிகழ்வு, 'எமது நிலம் எமக்கு வேண்டும்' - 'நாங்கள் எங்கள் வீட்டுக்குச் செல்ல, படையினரே உங்கள் வீட்டுக்குச் செல்லுங்கள்' என்ற தொனிப்பொருளில் முன்னெடுக்கப்பட்டது.

வரலாற்று ரீதியிலும் சரி, சர்வதேச கவனயீர்ப்பிலும் சரி இந்த நிகழ்வு - இடம்பெயர்ந்த மக்களின் அவலங்களைப் பதிவுக்குள்ளாக்கியுள்ளது.

எனினும், முடிவுகளற்றுத் தொடரும் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகள் எதுவும் எட்டப்படவில்லை. இந்த நிலையிலேயே - உயர்பாதுகாப்பு வலயங்கள் தொடர்பாக ஆராயும் மாநாடு ஒன்றில் கலந்துகொள்ளும் நோக்கில், தென்னாபிரிக்க மற்றும் நைஜீரிய நாடுகளின் இராணுவ ஜெனரல்கள் இருவர் - யாழ்ப்பாணம் வரவுள்ளனர்.

இவர்கள், குடாநாட்டிலுள்ள உயர்பாதுகாப்பு வலயங்கள்- இதனால் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்தும், வேறு நாடுகளில் இருந்த உயர்பாதுகாப்பு வலயங்கள் குறித்தும், இந்த மாநாட்டில் ஆராயவிருக்கின்றனர். இதில் இவர்களின் ஆலோசனைகளும் முன்வைக்கப்படவுள்ளன.

இந்த மாநாட்டில் கலந்துகொள்ள யாழ். குடாநாட்டுப் படைத்தளபதி அழைக்கப்பட்டிருப்பதோடு, முன்னாள் இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிறிலால் வீரசூரியவும் அழைக்கப்பட்டிருக்கின்றார்.

உயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பாக, இந்த மாநாட்டில் ஆலோசிக்கப்படுவதன் மூலம் - இது தொடர்பான சர்வதேச கருத்துநிலை உருவாக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

உயர்பாதுகாப்பு வலயங்களை அகற்றுதல் அல்லது மீளமைத்தல் தொடர்பாக, கருத்துருவாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாக இந்த மாநாடு அமையும் எனக் கூறப்பட்டாலும்-

கடந்த காலங்களில் உயர்பாதுகாப்பு வலயங்கள் தொடர்பாக - அறிக்கை சமர்ப்பிக்க, அரசாங்கத்தினால் அழைக்கப்பட்ட இந்திய இராணுவ அதிகாரி ஜெனரல் சதீஷ் நம்பியாரின் அறிக்கைபோன்று - மக்களுக்கு ஏமாற்றத்தைக் கொடுக்காமல் பார்த்துக் கொள்வது நல்லது.

பிரித்தானிய முன்னாள் இராணுவ அதிகாரி ஜெனரல் மைக்கல் றோசும் இந்த உயர்பாதுகாப்பு வலயங்கள் குறித்து கவனம் செலுத்தியிருந்தார்.

ஆக - குடாநாட்டில் உள்ள இராணுவ உயர்பாதுகாப்பு வலயங்களைப் பார்வையிடவோ, ஆராயவோ வரும் வெளிநாட்டு இராணுவ அதிகாரிகளின் பட்டியல்தான் நீள்கின்றது.

ஆனால், இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியமர்வு மட்டும் இன்னமும் சாத்தியப்படவில்லை.

நாளை வரவுள்ள தென்னாபிரிக்க - நைஜீரிய இராணுவ அதிகாரிகள் குழுவினர், அரசசார்பற்ற அமைப்பின் அழைப்பின் பேரில் இங்கு வருகை தரவுள்ளமை - இந்தப் பிரச்சினையின் வித்தியாசமான கோணத்தை வெளிப்படுத்துவதாகும்.

இந்தப் படையதிகாரிகள் - உயர்பாதுகாப்பு வலயங்களுடன் தொடர்புடைய படையதிகாரிகளுடன் நடத்தக் கூடிய கலந்துரையாடல்கள் - இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியமர்வுக்கு, குடாநாட்டு மக்களின் இயல்பு வாழ்வைக் கட்டியெழுப்புவதற்கு உதவியானதாக அமையவேண்டும் என்பது, எதிர்பார்ப்பாக இருக்கிறது. எனினும் -

இதுவரை - எந்தவொரு படையதிகாரியையுமே குடாநாட்டிலுள்ள உயர்பாதுகாப்பு வலயங்களை மனிதாபிமானப் பிரச்சினையாகப் பார்க்கவோ, அனுகவோ இல்லை. மாறாக - இராணுவ ரீதியான கண்ணோட்டத்துடனேயே பார்க்கப்பட்டு வந்துள்ளன.

இந்தக் கண்ணோட்டததை, அரச படையதிகாரிகள் மாற்றிக்கொள்ளும் நிலை ஏற்படுவது - ஏற்படுத்தப்படுவது முக்கியமானது.

# சந்திரிகாவுக்கு அதிகாரம் இருந்தாலும் நாடாளுமன்றத்தைக் கலைக்கமுடியாது!

## நிதி அமைச்சர் கே.என்.சொக்ஸி கூறுகிறார்



(கொழும்பு)

நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு இருக்கின்றபோதிலும், தற்போதைய நாடாளுமன்றத்தைக் கலைக்க முடியாது என்று, நிதியமைச்சர் கே.என்.சொக்ஸி தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளைப் பொறுத்தவரையில், ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்துக்குப் பெரும்பான்மைப் பலமுள்ளது. இதனால், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, நாடாளுமன்றத்தைக் கலைக்கவேண்டுமென்றால் - பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் கலந்தாலோசித்தே கலைக்கமுடியும்.

ஜே.வி.பியுடன், சிறிலங்கா சுதந்திரக்கட்சி கூட்டணி உடன்படிக்கையைக் கைச்சாத்திட்ட பின்னர், நாடாளுமன்றத்தைக் கலைத்துப் பொதுத்தேர்தல் ஒன்றுக்கான முஸ்தீபு இடம்பெறுவதாக, வெளியிடப்படும் தகவல்கள் குறித்துக் கருத்து வெளியிட்ட அமைச்சர் கே.என்.சொக்ஸி -

ஜே.வி.பி. உறுப்பினர்களும், பொதுஜன ஐக்கிய முன்னணி உறுப்பினர்களும் நாடாளுமன்றத்தில் இணைந்தாலும், அவர்களுக்குப் போதிய பெரும்பான்மை நாடாளுமன்றத்தில் கிடைக்காது.

நாடாளுமன்றத்தைப் பொறுத்தவரையில், தமிழ்த் தேசிய கூட்டமைப்பு முக்கியமானது. கூட்டமைப்பு எந்தப் பக்கம் சாய்கின்றதோ, அவர்களுக்குப் பெரும்பான்மை கிட்டும்.

இவற்றைவிட, இ.தொ.கா., சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் பெரும் பான்மை விடயத்தில், முக்கியபங்கு வகிப்பார்கள் என்று நிதியமைச்சர் கே.என்.சொக்ஸி மேலும் தெரிவித்தார்.

# சிறைவாசத்தை இன்முகத்துடன் ஏற்ற வைகோவுக்கு ம.தி.மு.க. பாராட்டு!

(சென்னை)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஆதரித்துப் பேசியதற்காக, 'பொடா' சட்டத்தின்கீழ் சிறைவாசத்தை அனுபவித்துவரும் ம.தி.மு.க. பொதுச்செயலர் வைகோ உள்ளிட்ட 9 ம.தி.மு.கவினருக்கு பாராட்டு தெரிவித்து, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் உயர்நிலைக் குழு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

ஜெயலலிதாவின் சர்வாதிகார பேயாட்டத்துக்கு எதிராக, மக்களைத் திரட்டும் வகையில் தமிழகம் முழுவதும் வரும் 11 ஆம், 12 ஆம் திகதிகளில் கண்டனப் பொதுக் கூட்டம நடத்துவது, கண்டனச் சுவரொட்டிகளை தமிழகம் முழுவதும் ஒட்டுவது, சுவர் விளம்பரம் செய்வது, ம.தி.மு.கவினர் அனைவரும் கறுப்புப்பட்டி அணிவது, அவரவர் வீடுகளில் கறுப்புக்கொடிகள் ஏற்றுவதென இந்தக் கூட்டத்தில் ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஜெயலலிதாவின் முகமூடியைக் கிழித்தெறிந்து, அவரது சர்வாதிகார உருவத்தை நாட்டுக்கு அடையாளம்காட்ட மேற்கொள்ளப்படும் ஜனநாயக நடவடிக்கைகளின் சிகரமாக, சென்னை - மயிலை மாங்கொல்லையில் 11 ஆம் திகதி மாலை மாபெரும் பொதுக்கூட்டம் நடத்துவது என்றும், அதில் திராவிட பேரியக்கத் தலைவர் கலைஞர் கருணாநிதியை சிறப்புரையாற்ற அழைப்பது என்றும் இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

## க.பொ.த. உயர்தர

# செய்முறைப் பரீட்சை 14 ஆம் திகதி நடக்கும்!

கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற கல்விப் பொதுத் தராதரப்பத்திர உயர்தரப் பரீட்சையின் மனைப்பொருளியல், நடனம், சங்கீதம் ஆகிய பாடங்களின் எழுத்துப் பரீட்சையில் தகுதிபெற்ற பரீட்சார்த்திகளுக்கான செய்முறைப் பரீட்சைகள், எதிர்வரும் 14 ஆம் திகதி நடைபெறவுள்ளதாக பரீட்சை ஆணையாளர் டபிள்யூ.ஏ.எம்.விஜயசிறி அறிவித்துள்ளார்.

தகுதிபெற்ற பாடசாலைப் பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள் - பாடசாலை அதிபர்களுக்கும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கும் சொந்த முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# முஸ்லிம் சமூகத்தை விற்றுப்பிழைக்கும் அரசியல் நடத்துகிறார் அமைச்சர் ஹக்கீம்!

## அம்பாறையில் அஸீஸ் எம்.பி. பாய்ச்சல்

(கொழும்பு)

"கரையோர மாவட்டம் கோரிவந்த அம்பாறை மாவட்ட முஸ்லிம் மக்களுக்கு, கண்துடைப்புக்காக - ஒரு மேலதிக அரசாங்க அதிபர் அலுவலகம் மட்டுமே வழங்கப்படுகிறது. அரசியல் முதிர்ச்சியற்ற சிலர் - இதனைக் கல்முனைக் கரையோர மாவட்டமென்று, மார்தட்டுவதை எவரும் நம்பிவிட வேண்டாம். இது ஒரு கண்துடைப்பு மாவட்டம்".

- இவ்வாறு சிறிலங்கா முஸ்லீம் காங்கிரஸின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினரும், அஷ்ரப் காங்கிரஸ் ஸ்தாபகர்களில் ஒருவருமான எம்.பி.ஏ. அஸீஸ் குறிப்பிட்டார்.

பொத்துவில், சம்மாந்துறை, கல்முனைத் தொகுதிகளை உள்ளடக்கிய கரையோர மாவட்டம் உருவாக்கப் படவேண்டும் என்பதே, எமது கோரிக்கையாகும். அவ்வாறான ஒரு கரையோர மாவட்டம் ஏற்படுத்தப்பாடாமை குறித்து - ஜே.வி.பி., ஐக்கிய தேசியக் கட்சி உள்ளிட்ட பல கட்சிகள் அமைதியாக உள்ளதை நாம் நன்கு உணரவேண்டும்.

முஸ்லிம் சமுதாயம் இந்த நாட்டில் - சகல உரிமைகளையும், சலுகைகளையும் பெற்று, தன்மானத்துடன் தலைநிமிர்ந்து வாழவேண்டுமென்று, மறைந்த தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரப்பினால் உருவாக்கப்பட்ட அரசியல் பேரியக்கமான, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸை, இனறைய தலைவர் ரவூப் ஹக்கீம், சக்தியற்ற ஒரு அமைப்பாக மாற்றிவிட்டதோடு, எமது சமூகத்தை விற்றுப் பிழைக்கும் வியாபாரம் செய்கிறார்.

அஷ்ரப்பின் மறைவினால், அவரின் பாரியாரை ஓரங்கட்டிவிட்டு - நாம் நல்லவர், வல்லவர் என்று நினைத்துக் கொண்டு - அன்று தலைவராக்கிய் அமைச்சர் ரவூப் ஹக்கீம், எமது முஸ்லிம் சமுதாயத்தை விலைபேசும் அரசியல் நடத்துவது வேதனைதரும் விடயமாகும். கிழக்கு மாகாண மண்ணில், நாங்கள் ஆரம்பித்த கட்சிக்கு - கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த, அதுவும் அமபாறை மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவர் தலைவராக வரவேண்டும். அப்போதுதான் நாம் எமது தனித்துவத்தைப் பேணிப்பாதுகாக்கவும், உரிமைகளைப்பெறவும் முடியும்.

தற்போது நடைபெற்றுவரும் சமாதான முன்னெடுப்புக்களுக்கு, முஸ்லிம் மக்கள் ஒருபோதும் தடையாக இருக்கக்கூடாது. ஆனால், இந்த நாட்டில் வாழும் ஏனைய சமூகங்களுக்கு என்னென்ன உரிமைகள், சலுகைகள் வழங்கப்படுகிறதோ, அத்தகைய உரிமைகள், சலுகைகள் யாவும் எமக்கும் நீதியான அடிப்படையில் கிடைக்க வேண்டும் என்பதில் விழிப்புடன் இருக்கவேண்டும்.

அமைச்சர் அதாவுல்லாவை நான் ஆதரிக்க பல காரணங்கள் உண்டு. அவர்தான் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸை வழிநடத்தக்கூடிய சிறந்த தலைவராவார். அமைச்சர் ரவூப் ஹக்கீமை பலப்படுத்தவேண்டிய நான், அவரை விட்டுவிட்டு, அமைச்சர் அதாவுல்லாவின் பக்கம் நிற்கிறேன் என்றால் - மறைந்த தலைவரின் கனவுகளை நனவாக்கக்கூடிய சிறந்த தலைமைத்துவம் எது என்பதை உணர்ந்துவிட்டேன், என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

# வைரஸ் தொடர்பான வதந்தியால் இன்ரநெற் இணைப்புகள் துண்டிப்பு!

(கொழும்பு)

சர்வதேச கணினி வலையமைப்பின் ஊடாக, வைரஸ் பரப்பப்படவுள்ளதாகக் கிடைத்த தகவல்களையடுத்து பொலிஸ திணைக்களமும், ஏனைய நிறுவனங்களும் நேற்றுமுன்தினம் உஷாரடைந்தன.

சர்வதேச புலனாய்வுப் பிரிவின் ஊடாகப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவல்களையடுத்தே, பொலிஸ் நிலையங்களிலிருந்த இன்ரநெற் இணைப்புகள் துண்டிக் கப்பட்டன.

வெளிநாட்டிலிருந்து - வைரஸ் இன்ரநெற் தொடர்பு ஊடாகக் கணினிகளில் பரப்பி, அவற்றைச் செயலிழக்கச் செய்யத் திட்டமிட்டிருப்பதாகத் தகவல்கள் கிடைத்ததாலேயே இவ்வாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டதாகவும் பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்தனர்.

# சமாதானத்துக்கு ஆதரவாகவுள்ள எதிர்க்கட்சியினருடனும் பேசலாம்!

## அமைச்சர் கேலிய ரம்புக்வெல தெரிவிப்பு

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்குத் தீர்வு யுத்தமே என்ற நிலையிலிருந்த நம் நாட்டில், சமாதானப் பேச்சுவார்த்தைகள் மூலம் யுத்தத்திற்குத் தீர்வுகாண, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு முடியுமானால் - எதிர்க்கட்சியிலிருக்கும் சமாதானத்திற்கு ஆதரவான குழுவினர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தி, சமாதானத்தை நிலைநாட்டுவதற்கான அவசிய வேலைத்திட்டமொன்றை ஒழுங்குசெய்ய, ஐ.தே.கட்சியால் முடியும் என - விஞ்ஞான தொழில்நுட்ப பிரதியமைச்சர் கேலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் பன்வில இராஜசிங்க மத்திய மகாவித்தியாலயத்தில் நிர்மாணிக்கப்பட்ட தொழில்நுட்ப நிலையத்தைத் திறந்து வைத்து உரையாற்றும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

# எப்போதுமே தமிழுணர்வுதான் எனது பாடல்களின் மையக்கரு!

**எழுச்சிப் பாடல்களால் ஈழமக்கள் மத்தியில் புகழ்பெற்ற தேனிசை செல்லப்பா- தமிழகத்திலிருந்து வெளிவரும் 'குமுதம் தீராநதி' மாத இதழுக்கு வழங்கிய பேட்டியின் சில பகுதிகள் -**

"எங்கப்பாவுக்கு அண்ணாமலைச் செட்டியாரின் காவடிச்சிந்து மனப்பாடம். அவர் பெரிய முருகபக்தர். வீட்டிலேயே ராகத்துடன் பாடுவார். அவருடன் கோயிலுக்குப் போகும்போது, அவருடன் சேர்ந்து குழந்தையாக இருந்த நானும் பாடியிருக்கிறேன். அதனால் - இந்த இசையும், தாளமும் சிறுவயதிலேயே பழக்கமாகிவிட்டன.

அப்போது எனக்கு வயது பதின்மூன்று. அம்மாவிடம் சொல்லிவிட்டு, நேராகத் திருச்சிக்கு ரயிலில் கிளம்பிவிட்டேன். நடிகவேள் எம்.ஆர்.ராதாவின் வீட்டுக்குள் நுழையமுடியவில்லை. வெளியே கடைக்காரர் ஒருவர் அறிமுகமாகி, உள்ளே போனேன். இசைக்குழு இருக்கிற அறைக்குப் போகச்சொன்னார். முண்டாசு கட்டிக்கொண்டு எம்.ஆர்.ராதா வந்து தபேலா வாசிக்க, நான் பாடினேன். பாடுவதற்கு முன்பு 'என்ன சுதியில் பாடுவீங்க', ஆர்மோனியம் வாசிக்கிறவர் கேட்டார். 'நாலுகட்டை வைங்க' என்று சொன்னேன். "பரவாயில்லை சுதியெல்லாம் சொல்றானே" பாராட்டினார் ராதா. 'மங்கையர்க்கரசி' படத்தில் வந்த பாட்டைப் பாடினேன். அவருக்குப் பிடித்துவிட்டது."அப்படின்னா, மூன்று இட்லி கொடுத்துக் கம்பனியில் சேர்த்துக்கங்கடா" சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

போனதும் - முதலில் கோரஸ் பாடினேன். இரத்தக் கண்ணீர், லட்சுமிகாந்தன் என்று பல நாடகங்கள் நடக்கும். நாடக மேடைப் பதாகையில் 'திராவிடத் தொழிலாளர்களே.. ஒன்று சேருங்கள்' என்று எழுதியிருக்கும். தமிழுணர்வுப் பாடல்களும், பெரியாரைப் பற்றிய பாடல் களும் நாடகத்தில் பாடப்படும்.

1960 இல் மன்னார்குடியில் தந்தை பெரியார், சி.பா.ஆதித்தனாரும் சேர்ந்து "சுதந்திரத் தமிழ்நாடு" மாநாடு நடத்தினார்கள். அதில் பல தமிழ் அறிஞர்கள் கலந்து கொண்டார்கள். அந்த மாநாட்டில்தான் முதன்முறையாக நானே தனிக்குழுவை அமைத்து, பாரதிதாசன் பாடல்களை வைத்து, நிகழ்ச்சி நடத்தினேன். நிறையப் பாராட்டுக்கள் கிடைத்தன. "தேனிசை" என்கின்ற பட்டத்தை அதற்கு முன்பே எனக்குக் கொடுத்தவர் ஆதித்தனார்தான். பிறகு நிறைய வாய்ப்புகள் வந்தன.

சென்னையில் பாரதிதாசனிடம் ஒருமுறை அறிமுகப்படுத்தினார்கள். ஒரு பாடலைப் பாடச் சொன்னார். அவருடைய பாடலை இசையோடு பாடிக்காட்டினேன். உச்சரிப்புக்கும், உணர்வுக்கும் மதிப்பளித்துப் பாராட்டினார்கள். தொடர்ந்து கழகத்தோழர்களின் திருமண விழாக்களில் பாடப்போனேன். முழுக்கத் தமிழுணர்வை ஊட்டக்கூடிய எழுச்சியான பாடல்களைத்தான் பாடிக்கொண்டிருந்தேன்.

1983 இல் நடந்த கலவரத்துக்குப் பிறகு, இலங்கையில் பல இயக்கங்கள் ஆயுதம் தாங்கிப் போராடின. அதற்கு இந்திய அரசு அப்போது ஆதரவாக இருந்தது. அப்போது காசி ஆனந்தனின் உணர்ச்சிமயமான பாடல்களைப் பதிவுசெய்து கொடுத்தேன். அந்த ஒலிநாடாக்கள் கவனிக்கப்பட்டன. அதற்குப் பெரும் வரவேற்பு உருவாவதற்குக் காரணம், அதிலிருந்த தமிழுணர்வும், வேகமும்தான். 1990 இல் என்னை இலங்கைக்கு அழைத்திருந்தார்கள். அப்போது வீ.பி.சிங் பிரதமராகி, இலங்கையிலிருந்த இந்திய அமைதிப்படை வாபஸ் வாங்கிய காலகட்டம். பிரேமதாஸாவுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் அப்போது ஓரளவு உடன்பாடு இருந்தது.

தமிழீழப் பகுதிகளுக்குப் போனேன். யாழ்ப்பாணம் முற்றவெளியில் முதல் கச்சேரி. அதற்குப்பிறகு - கிளிநொச்சி, திருகோணமலை, வவுனியா, முல்லைத்தீவு, மட்டக்களப்பு என்று எட்டு மாவட்டங்களுக்கும் போனேன். இசைக் கச்சேரிகள் நிகழ்த்தினேன். காசி ஆனந்தனின் பாடல்களும், பாரதிதாசனின் பாடல்களும் அப்போதிருந்த தமிழுணர்வுக்கு, உரம்போட்டுத் தீனிபோடுகின்ற மாதிரி இருந்தன. போகின்ற இடங்களில் எல்லாம் பெருத்த வரவேற்பு. தமிழர்கள் புலம்பெயர்ந்துபோன பல நாடுகளுக்கு எனது ஒலிநாடாக்கள் சென்றன. 1994 இல் ஐரோப்பிய நாடுகளான - நோர்வே, டென்மார்க், சுவிஸ்சர்லாந்து, ஜேர்மனி, இத்தாலி, நெதர்லாந்து, பெல்ஜியம், பிரான்ஸ் உட்பட பல நாடுகளுக்குப் பயணஞ்செய்து, எல்லா இடங்களிலும் பாடினேன். "கொலைவாளினை எடடா" என்கிற பாரதிதாசன் பாட்டைத் திரும்பப் பாடச் சொல்லிக் கேட்பார்கள். "பொறிகக்கும் விழியோடு புறப்பட்டுவிட்டோம்.. போராட நாள் குறித்தோம்" என்கின்ற எழுச்சிப் பாடல்கள் இசைத் தட்டுக்களாக அங்கு பிரபல்யம் ஆயிற்று. "அழகான அந்தப் பனைமரம்... அடிக்கடி நினைவுவரும்" என்கிற பாட்டைப் பாடும்போது, பலர் நெகிழ்ந்து போவார்கள்.

1996 இல் கனடாவில் அங்குள்ள எல்லா மாகாணங்களுக்கும் போய் பாடினேன். கனடாவின் தலைநகரான ரொரண்டோவில் லம்போர் ஸ்டேடியத்தில், முன்பு மைக்கல் ஜக்சனுக்கு திரளான கூட்டம் கூடியிருக்கின்றது. அதற்குப் பிறகு, அதே ஸ்டேடியத்தில் என்னுடைய நிகழ்ச்சி. அதைவிட அதிகமான மக்கள் கூட்டம். பலரைத் திருப்பி அனுப்பி, இன்னொரு நாள் வரச்சொல்லும் அளவுக்குக் கூட்டம். அதனால், அந்த ஸ்டேடியத்தையே "தேனிசை அரங்கம்" என்று அழைக்கிறார்கள்.

'நயாகரா நீர்வீழ்ச்சி" விழக்கூடிய இடத்தில், தமிழில் "நல்வரவு" என்று எழுதியிருந்ததைப் பார்த்தபோது, பரவசமாக இருந்தது. பிறகு லண்டனுக்குப்போய் பி.பி.சியில் பாடினேன். தமிழர்களுடைய உணர்வும், பண்பாடும் வெளிப்படக்கூடிய, இசைவடிவங்களையும் அவர்கள் பெரிதும் விரும்புகிறார்கள். தமிழகத்துக்கேயுரித்தான நாட்டுப்புறப்பாடல்களையும் கொண்டுபோனேன். அதை வெளிப்படுத்தியதன்மூலம் பெரியளவில் அங்கீகாரம் கிடைத்தது.

"தங்கமாலை கழுத்துகளே... கொஞ்சம் நில்லுங்கள்... நஞ்சுமாலைக் கழுத்துகளை நினைவில்கொள்ளுங்கள்..... களத்தை மறக்கலாமா? தமிழ் நிலத்தை மறக்கலாமா?" என்கின்ற பாடலை அவுஸ்திரேலியாவில் மெல்போண நகரத்தில் பாடிமுடித்ததும், ஒரு வயதான அம்மா தன் கழுத்தில் போட்டிருந்த நகைகளை தட்டில் போட்டுவிட்டு தலையில் அடித்தபடி அழுதார். என்னை உலுக்கி வாட்டி எடுத்துவிட்டது அந்தச் சம்பவம். வெறும் பொழுதுபோக்காக அதை நினைத்து அவர்களால் நகர்ந்துவிட முடியவில்லை. எங்கோ நெல்லை மாவட்டத்துக் கிராமத்தில் பிறந்து வளர்ந்த நான், அவர்களுடைய உணர்வுகளுடன் நெருங்கிப்போனேன். அந்தளவுக்கு நேசம் இருந்ததால்தான் "நீங்கள் இறந்தாலும் எங்க மண்ணுக்கு வந்துதான் இறக்கவேணும்" என்று சொல்கிற அளவுக்கு நெருக்கம் பாராட்டிய தமிழ் உள்ளங்களே, நான் சம்பாதித்த பெரும் சொத்து.



தேனிசை செல்லப்பா

தமிழ்நாட்டில் - தமிழுணர்வு பற்றிக் கோட்பாடுகள் அதிகம் இருந்தாலும், பாடசாலைகளில் இன்னும் தமிழைக் கட்டாய பாடமாக்க முடியவில்லை. இங்கிருக்கின்ற அரசுகளும் அதற்காகப் பெரிதும் முயற்சிக்கவில்லை. தமிழ்நாடு என்று சொல்கின்றோமே, இங்குள்ள தமிழர்களுக்குத் தமிழின் உணர்வு இருக்கின்றதா? தமிழன் என்கின்ற அடையாளம் இருக்கின்றதா? இது தான் பாடல்கள் வழியாக வைக்கின்ற எங்களைப் போன்றவர்களின் உணர்வு.

இதுவரை நான் பாடிய 1500 பாடல்களும் ஒலித்தட்டுகளாகி, உலகளவில் சென்றிருக்கின்றன. ஆலயங்களில் தமிழ்மொழியில் அர்ச்சனை செய்யப் பிரச்சினை வந்ததும், அதற்கும் உடனடியாகப் பாடல்கள் பாடியிருக்கின்றேன். எப்போதும் தமிழுணர்வுதான் எனது பாடல்களில் மையமாக இருந்து வந்திருக்கின்றது. ★

# தமிழ்த் தேசிய உரிமையையும், இருப்பையும் விடுதலைப் புலிகளே பிரதிபலித்து நிற்கின்றனர்

## புதிய ஜனநாயகக் கட்சியின் ஆண்டுவிழாவில் செந்திவேல்

இலங்கையில் தேசிய இனப்பிரச்சினை என்பது, தனியே தமிழ் - சிங்கள இனமுரண்பாட்டுப் பிரச்சினை மட்டுமல்ல, அது, மேலே குறிப்பிட்ட தேசிய இனங்களையும், சிறுபான்மைச் சமூகங்களையும் உள்ளடக்கிய பரந்ததும், பாரதூரமான அம்சங்களைக் கொண்ட பிரச்சினை. இந்தத் தேசிய இனங்களுக்கும், பேரினவாத ஒடுக்குமுறைகளுக்குமிடையிலான, முரண்பாட்டை - யுத்தத்தால் தீர்வுக்குக் கொண்டுவரமுடியாது. 19 வருடகால யுத்தம் இதன் யதார்த்தத்தை வெளிப்படுத்தி வந்துள்ளது. எனவே, தேசிய இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலமான அரசியற்தீர்வே ஒரேவழிமுறை என்பதை, தமது கட்சி தொடர்ந்து வலியுறுத்தி வருவதாக- புதிய ஜனநாயகக் கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல் தெரிவித்தார். கட்சியின் 25 ஆவது ஆண்டு நிறைவுவிழாவில், அவர் நிகழ்த்திய உரையில் மேலும் தெரிவித்ததாவது-

ஐக்கிய தேசியக்கட்சி எத்தகைய உள்நோக்கங்களைக் கொண்டிருந்தபோதிலும், புலிகள் இயக்கத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு வந்து, யுத்தத்தை நிறுத்தி சமாதானப் பேச்சுவார்த்தைக்கு முன்வந்தமையை, எமது கட்சி வரவேற்றுச் சரியானதிசை மார்க்கத்தில் பயணிக்கவேண்டும் எனச் சுட்டிக்காட்டியது. அதேவேளை, எதிர்கால அபாயங்களையும் சுட்டிக்காட்டி எச்சரிக்கை செய்தும்கொண்டது.

கடந்த ஒன்றரை வருடகாலமாக அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் ஆறு தடவைகள் நடைபெற்றுவிட்டன. ஆனால், அவற்றில் பேசப்பட்ட அல்லது முடிவுசெய்யப்பட்ட விடயங்களில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளோ, செயற்பாடுகளோ இடம்பெறவில்லை எனப் புலிகள் தரப்பில் கூறப்படும் விடயங்களில் போதிய நியாயங்கள் இருக்கின்றன.

அதன் காரணமாகப் பேச்சுவார்த்தையிலிருந்து புலிகள் இயக்கம் தற்காலிகமாக விலகியும் கொண்டது. கடந்தமாதம் ஜப்பானியத் தலைநகா ரோக்கியோவில் நடைபெற்ற, இலங்கைக்கு உதவிவழங்கும் மாநாட்டிலும், புலிகள் பங்குகொள்வதைத் தவிர்த்தனர்.

புலிகள் ஒடுக்குமுறைகுள்ளாகி நிற்கும் தமிழ்த்தேசிய இனத்தின் இன உரிமைகளையும், இருப்பையும, அதற்கான அபிலாஷைகளையும் தேசியவாத நிலையில் பிரதிபலித்து நிற்கும் ஒரு இயக்கமாகும். எனவே, அந்த இயக்கம் - தான் சார்ந்த மக்களின் அடிப்படை அபிலாஷைகளைக் கணக்கிட்டே கோரிக்கைகளை முன்வைக்க முடியும். பேரினவாதிகளின் ஏமாற்றுதனங்களின் வலைகளில் சிக்குப்படுவதையோ, அந்நிய ஏகாதிபத்திய சக்திகளின் பணக்கட்டுக்களைக் கண்டு மயங்கவோ, அன்றி அமெரிக்காவின் வெளிப்படையான மிரட்டல்களுக்கோ, இந்தியப் பிராந்திய மேலாதிக்கத்தின் குழிபறிப்புக்களுக்கோ- விட்டுக்கொடுத்து அடிபணிந்து நிற்க முடியாது.

ஏனெனில், புலிகளைப் பலவீனப்படுத்தி, அடிபணியச் செய்வது அல்லது அழித்தொழிப்பது, அதன்மூலம் தமிழர்களின் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையைக் கைவிடச் செய்வது என்ற, உள்ளார்ந்த நோககிலும் போககிலும் அமெரிக்கா, மேற்குலகநாடுகள், இந்தியா என்பன இலங்கையின் ஆளும் வர்க்கத்துடன் இணங்கி நிற்கின்றன. இத்தகைய நிலைப்பாடு எதிர்காலத்தில் அபாயகரமான சூழலுக்கும், முடிவுகளுக்குமே இட்டுச்செல்லத்தக்கதாகும்.

அதேவேளை, ரணில் விக்கிரமசிங்கவுக்கும், அவரது அரசாங்கத்துக்கும் சமாதானம் அரசியற்தீர்வில் நேர்மையான பற்றுதியும், நம்பிக்கையும் இருக்குமானால், புலிகளைப் பேச்சுவார்த்தை மேசைக்கு மீளவும் அழைத்துச்செல்வதற்கான பொறுப்பு, அவர்களுக்கேயுரியதாகும்.

எனவே, வடக்கு - கிழக்குக்கான ஒரு நிர்வாகக் கட்டமைப்பே புலிகளின் பங்களிப்புடன் ஜனநாயக ரீதியில் உருவாக்கிச் செயற்பட வைப்பது அவசியமாகின்றது. இதனைப் பேரினவாத நிலைப்பாட்டுக்கு அப்பால் எவ்வளவு தூரத்துக்குச் சாத்தியப்படுத்த முடியும் என்பதே, ரணில் அரசாங்கத்தின் முன்னாலுள்ள மிகப்பெரிய கேள்வியாகும்.

இன்று முட்டுக்கட்டை நிலையை அடைந்துள்ள பேச்சுவார்த்தையை, இந்தச் சந்தர்ப்பத்தில் வைத்துக் குழப்பிக்கொள்ளப் பொதுஜன ஐக்கிய முன்னணிக்குள் உள்ள - தீவிர வலதுசாரிகள் - இடதுசாரி வேஷத்துடன் நாடாளுமன்ற அரசியலை நடாத்தும் ஜே.வி.பியுடன் கூட்டுச்சேர்ந்து செயலாற்றுகின்றனர்.

ஜனாதிபதியின் அதிகாரங்களைப் பயன்படுத்தி ஆட்சி மாற்றத்தையோ அன்றி, ஆட்சிக் கவிழ்ப்பையோ கொணடுவருமாறு, வற்புறுத்தி வருகின்றனர். இவர்களது செயற்பாடுகளுக்குப் பின்னாலிருந்து சமாதான முயற்சிகளுக்குக் குழிபறிப்பதில் இந்தியாவின் ஆளும் வர்க்க சக்திகளிருந்து வருகிறார்கள். இது நாட்டை மேலும் அழிவுப்பாதைக்கு இட்டுச்செல்லும் அதிகாரத்துக்கான முயற்சியே அன்றி, எரியும் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் முயற்சியல்ல.

ஏனெனில், மாற்றுக்கொள்கை ஒன்று - ஜனாதிபதியிடமோ, பொதுஜன ஐக்கிய முன்னணியிடமோ, ஜே.வி.பியிடமோ காணப்படவில்லை. ஆட்சி அதிகார மோகமும், அதற்கான பசியுமே அவர்களிடம் காணப்படுகின்றது.

கடந்த இருபத்தைந்து வருடங்களை ஆழ்ந்து நோக்கிப்பார்க்கும்போது, இந்த நாட்டில் இடம்பெற்று வந்த யுத்தத்தின் பின்னாலிருந்து, தத்தமது நலன்களைப் பாதுகாத்துப் பயனடைந்த, அதே அந்நிய உள்நாட்டுச் சக்திகள்தான் - தற்போதைய சமாதான முழக்கத்தின் பின்னாலும் நினறு செயற்பட்டு வருகின்றனர் என்பது தெட்டத்தெளிவானதாகும்.

இவர்கள் அனைவரும் தமிழ் மக்கள் மத்தியில் போராட்ட இயக்கமாக இருந்துவரும் புலிகள், படியிறங்கிவந்து, முற்றான விட்டுக் கொடுப்புக்களைச் செய்யவேண்டும் என வலியுறுத்தி நிற்கின்றனர். அதேயளவுக்கு ஆளும் பேரினவாத சக்திகளிடம் தமிழர்களுக்கு நியாயமான அரசியறதீர்வு வழங்கப்பட வேண்டும் என்பதை வற்புறுத்த அவர்கள் தயாரில்லாதநிலையே காணப்படுகின்றது.

எனவேதான் சமாதானம், இயல்பு வாழ்க்கை என்பன நியாயமாக ஏற்படுத்தப்படும் அரசியற்தீர்வின் ஊடாக மட்டுமே சாத்தியமாக்கப்படல் வேண்டும் என்பதை, எமது கட்சி வற்புறுத்துகின்றது. யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்படல் வேண்டும். சமாதானம் நிலைக்கவேண்டும். வடக்கு-கிழக்கு மக்கள் புனரமைப்பு, புனர்வாழ்வு மறுசீரமைப்புப் பெறவேண்டும் என்பதில் இரண்டு பேச்சுக்கு இடமிருக்கமுடியாது.

ஆனால், அதற்காக முற்றிலும் விட்டுக்கொடுத்துப் பேரினவாத உள்நோக்கங்களுக்கும், அமெரிக்காவின் மிரட்டலுக்கும் அடிபணிந்து - ஏதோ தருவதை வாங்கிக்கொள்வது என்ற தாழ்நிலைக்குத் தமிழ்மக்கள் சென்றுவிடமுடியாது. இதுவரை காலமும் வடக்கு - கிழக்கில் இழந்த உயிர்களுக்கும், சிந்திய இரத்தத்துக்கும் பதிலீடாக, முழுமையான அரசியற்தீர்வையே மக்கள் எதிர்பார்க்கின்றனர். அத்தகைய தீர்வு சுயநிர்ணய உரிமை அடிப்படையிலான வடக்கு- கிழக்கு இணைந்த சுயாட்சி என்பதாகவே இருக்கமுடியும். அதனை நோக்கிப் பேச்சுவார்த்தை மேசையைத் தயார்படுத்துவதே, ரணில் அரசாங்கத்தின் கடமையாக இருக்கவேண்டும்.

எனவே, மீண்டும் கொடிய யுத்தம் மூழ்வதைத் தடுக்கவும், சமாதானத்தை நீடித்து நிரந்தரமாக்கச் செய்யவும், ஒரே உத்தரவாதம் அரசாங்கமும், ஜனாதிபதியும் முன்வந்து விட்டுக்கொடுப்புக்களுடனான பேச்சுவார்த்தையைத் தொடரமுன்வரல் வேண்டும் என்பதை, எமது கட்சி இந்த இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவு விழாவில் வற்புறுத்துகின்றது. நியாயமான அரசியற்தீர்வுக்கும், நீடித்த சமாதானத்துக்குமான பரந்த வெகுஜன இயக்கத்தைத் தெற்கிலும், மலையகத்திலும், வடக்கு - கிழக்கிலும் முனனெடுக்க வேண்டும் என்னும் வேண்டுகோளை இந்தவேளையில் விடுக்கின்றது, என அவர் மேலும் தெரிவித்தார்.

# அரசாங்க கேள்வி அறிவித்தல்

## புனர்வாழ்வளிப்பு, அகதிகள் மீள்குடியமர்த்துகை அமைச்சினால் யாழ். மாவட்டத்திற்கு நிவாரணத்துக்கு வழங்கப்படும் அரிசி (புழுங்கல் சிவப்பு நாடு) வழங்கலுக்கான கேள்வி கோரல்

01) யாழ்.மாவட்டத்தில் இலவச நிவாரணம்பெறும் குடும்பங்களுக்கான 2003 ஜூன், ஜூலை, ஓகஸ்ட், செப்ரம்பர் ஆகிய மாதங்களுக்கான நிவாரணம் வழங்குவதற்குத் தேவையான அரிசியை யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களிலிருந்து கொள்வனவுசெய்து கீழ்க்குறிப்பிட்டுள்ள ப.நோ.சங்கங்களுக்கான - கீழே தரப்பட்டுள்ள தொகை அரிசியை நேரடியாக விநியோகிப்பதற்கான கேள்விகள் - மேற்குறிப்பிடப்பட்டுள்ள மாவட்டங்களில் பதிவுசெய்யப்பட்டுள்ள ப.நோ.கூட்டுறவுச் சங்கங்களிடம் (வரைவுள்ளது) இருந்து கோரப்படுகின்றன. ஒவ்வொரு ப.நோ. கூட்டுறவுச் சங்கத்திற்கும் வழங்கீடு செய்யப்படவேண்டிய தொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| இல. | ப.நோ.கூ.சங்கம் | அரிசியின் அளவு | | | |
|---|---|---|---|---|---|
| | | 2003 ஜூன் (MT) | 2003 ஜூலை (MT) | 2003 ஓகஸ்ட் (MT) | 2003 செப்ரெம்பர் (MT) |
| 01 | சாவகச்சேரி | 133 | 133 | 133 | 133 |
| 02 | கைதடி | 65 | 65 | 65 | 65 |
| 03 | கொடிகாமம் | 120 | 120 | 120 | 120 |
| 04 | உடுப்பிட்டி | 37 | 37 | 37 | 37 |
| 05 | கட்டைவேலி -நெல்லியடி | 49 | 49 | 49 | 49 |
| 06 | பருத்தித்துறை | 104 | 104 | 104 | 104 |
| 07 | புலோலி | 32 | 32 | 32 | 32 |
| 08 | மருதங்கேணி | 78 | 78 | 78 | 78 |
| 09 | யாழ்ப்பாணம் | 276 | 276 | 276 | 276 |
| 10 | நல்லூர் | 123 | 123 | 123 | 123 |
| 11 | அச்சுவேலி | 132 | 132 | 132 | 132 |
| 12 | நீர்வேலி | 127 | 127 | 127 | 127 |
| 13 | மானிப்பாய் | 112 | 112 | 112 | 112 |
| 14 | பண்டத்தரிப்பு | 84 | 84 | 84 | 84 |
| 15 | அளவெட்டி - மல்லாகம் | 61 | 61 | 61 | 61 |
| 16 | தெல்லிப்பளை | 126 | 126 | 126 | 126 |
| 17 | சங்கானை | 167 | 167 | 167 | 167 |
| 18 | சுன்னாகம் | 172 | 172 | 172 | 172 |
| 19 | புங்குடுதீவு - நயினாதீவு | 28 | 28 | 28 | 28 |
| 20 | வேலணை | 49 | 49 | 49 | 49 |
| 21 | ஊர்காவற்றுறை | 64 | 64 | 64 | 64 |
| 22 | காரைநகர் | 50 | 50 | 50 | 50 |
| 23 | தீவகம் | 14 | 14 | 14 | 14 |
| 24 | நெடுந்தீவு | 27 | 27 | 27 | 27 |
| | மொத்தம் | 2230 | 2230 | 2230 | 2230 |

02) கேள்விகளைச் சமர்ப்பிக்க விரும்பும் ப.நோ.கூ. சங்கங்கள் மீளளிக்கமுடியாத கேள்விவைப்பாக ரூபா 500/= ஐ யாழ். மாவட்ட புனர்வாழ்வு, புனரமைப்புச் செயலகத்தில் செலுத்தி, கேள்விப் படிவங்களையும், கேள்வி ஆவணங்களையும் 2003.07.08 ஆம் திகதி தொடக்கம் 2003.07.22 ஆம் திகதி வரையிலான காலப் பகுதியில் - அலுவலக நாட்களில் முற்பகல் 10.00 மணி தொடக்கம் பிற்பகல் 3.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

இவ்வசதிகள் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்ட ப.நோ.கூ.சங்கங்களைப் பொறுத்தவரையில் அந்தந்த மாவட்ட அரசாங்க அதிபரினுடைய அலுவலகத்தில் செய்யப்பட்டுள்ளன.

03) மீளளிக்கமுடியாத கேள்விவைப்பாக ரூபா 500/= ஐ அந்தந்த மாவட்ட செயலகங்களில் செலுத்தி, அரசாங்க அதிபர்களிடம் இருந்து கேள்விப் படிவங்களையும் கேள்வி ஆவணங்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

04) கேள்வி கோரப்படவுள்ள அரிசி, புழுங்கல் (சிவப்பு நாடு) அரிசியாக இருத்தல் வேண்டும் என்பதுடன், அவை கேள்வி பற்றிய ஆவணத்தில் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகளைக் கொண்டிருத்தல் கட்டாயமானதாகும்.

05) பூரணப்படுத்திய இரு கேள்விப் படிவங்களை - தலைவர், மாவட்ட கேள்விச்சபை, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் (அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்) என முகவரியிடப்பட்ட நீளத் தபால் உறையில், நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ யாழ். செயலக மாவட்ட புனர்வாழ்வு, புனரமைப்புச் செயலக (கணக்காளரது) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2003.07.23 பிற்பகல் 2.00 மணிக்கு முன்பாகச் சேர்த்தல் வேண்டும். அன்றைய தினம் பிற்பகல் 3.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அப்போது கேள்விகாரர் அல்லது அவரது எழுத்துமூலமான அங்கீகாரம் பெற்ற பிரதிநிதி சமுகமளிக்க முடியும்.

06)கேள்விப்பத்திரத்தின் தபால் உறையில் இடதுபக்க மேல் மூலையில் "அரிசி வழங்குவதற்கான கேள்வி" என எழுதப்பட வேண்டும்.

07) கேள்விகாரர்கள் (Bidders) குறிப்பிடப்பட்ட ப.நோ.கூ. சங்கங்களில் ஒன்றுக்கு அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவைக்கு தமது கேள்விகளைச் சமர்ப்பிப்பதற்கும் அந்தச் சங்கங்களுக்கு விநியோகிப்பதற்கான வெவ்வேறான விலைகளைக் குறிப்பிடுவதற்கும் அருகதையுடையவர்களாவர். ஒவ்வொரு ப.நோ.கூ. சங்கத்திற்கும் விநியோகிக்கப்பட வேண்டிய அரிசியின் தொகை வெவ்வேறான கேள்விகளாகக் கருதப்படும்.

08)ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விகாரர் ஒப்பந்தத்தின் பெறுமதியில் 10% மீளளிக்கப்படக்கூடிய வைப்பாக (செயல்படுத்தல் முறிக்காக - Performance Bond) செலுத்தி ஒப்பந்தம் செய்துகொள்ளல் வேண்டும்.

09) கேள்விகள் பரிசீலனை செய்யப்படும் பொழுது சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளின் விநியோகத்துக்கான விலை, மாவட்ட விலை நிர்ணய சபையினால் நிர்ணயிக்கப்பட்ட விலையிலும் அதிகமாக இருத்தல் கூடாது. மாவட்ட விலை நிர்ணயம் செய்யப்படும் பொழுது விநியோக விலை, சந்தை விலையிலும் பார்க்க எக்காரணம் கொண்டும் அதிகமாக இருக்கமாட்டாது.

**செ.பத்மநாதன்,**
**தலைவர்/அரச அதிபர்,**
**மாவட்ட கேள்விச் சபை/மாவட்ட செயலகம்,**
**யாழ்ப்பாணம்.**
2003.07.07

(சி1206)

கிளிநொச்சி - முல்லைத்தீவில்

# சிறுபோக நெற்செய்கைக்கு 59 லட்சம் ரூபா வங்கிக்கடன்!

கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்ட விவசாயிகளுக்கு - சிறுபோக நெற்செய்கையை மேற்கொள்வதற்கு, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கிராமிய அபிவிருத்தி வங்கி, சுமார் 59 இலட்சம் ரூபாவை வழங்கியுள்ளது.

கடனடிப்படையில் வழங்கப்பட்ட இப்பணத்தை, இந்த மாவட்டங்களைச சேர்ந்த 490 விவசாயிகள் பெற்றுக் கொண்டனர்.

இதில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 397 விவசாயிகளும், முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த 93 விவசாயிகளும் இக்கடனுதவிகளைப் பெற்றுக்கொண்டனர்.

மேற்படி விவசாயிகளின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதுடன், விவசாயிகளைத் தொடர்ந்தும், விவசாய நடவடிக்கையில் ஈடுபடுத்தும் நோக்கத்துடனேயே, மேற்படி கடன் தொகை வழங்கப்பட்டதாகக் கிராமிய அபிவிருத்தி வங்கியினர் தெரிவித்தனர். (122)

# சமுர்த்தி அதிகாரிகள் குழு நெடுந்தீவுக்கு விஜயம்!

சமுர்த்தி அதிகார சபையின் அதிகாரிகள் குழுவொன்று நெடுந்தீவுக்கு விஜயம் செய்துள்ளது.

சமுர்த்தி அதிகார சபையின் நிதி விடயங்களுக்கான பிரதிப் பணிப்பாளர் குணரட்ண, சமுர்த்தி அபிவிருத்திக்கான பிரதிப் பணிப்பாளர் நடேசராசா உட்பட மேலும் சில சமுர்த்தி முகாமையாளர்களும் இக் குழுவில் அடங்கியிருந்தனர்.

மக்களின் குறைபாடுகளை அறிதல், தேவைகளை இனங்காணல் போன்றவற்றுக்காகவே இக்குழு நெடுந்தீவுக்கு விஜயம்செய்தது. (113)

# சிரேஷ்ட மாணவர்களுக்கு தலைமைத்துவப் பயிற்சி!

## யாழ்ப்பாணத்திலிருந்து 45 மாணவர்கள் தெரிவு

(கொழும்பு)

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் பாடசாலை சிரேஷ்ட மாணவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சியில் கலந்துகொள்வதற்காக, யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 45 மாணவர்கள் செல்லவுள்ளனர்.

மேற்படி பயிற்சி எதிர்வரும் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. இலங்கை முழுவதிலும் இருந்தும் இப் பயிற்சி நெறியல் 390 மாணவர்கள் கலந்துகொள்ளவுள்ளனர். வடக்கு - கிழக்கிலிருந்து முதன்முறையாக 79 மாணவர்கள் கலந்துகொள்கின்றனர்.

சர்வதேச பல்கலைக்கழக ஒன்றியமான ஐசேக்குடன் இணைந்து கார்சன்ஸ் நிறுவனம் இப்பயிற்சி நெறியை நடத்தவுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் - சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, யாழ்.இந்துக்கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி, நெல்லியடி ம.ம.வித்தியாலயம், சென்.ஜோன்ஸ் கல்லூரி, வேம்படி மகளிர் பாடசாலை ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த 45 மாணவர்கள் கொழும்பு செல்லவுள்ளனர். (122)


## சிறுவிளம்பரம்

### பெயர் மாற்றம்

பாலேந்திரம் பரமேஸ்வரி தம்பதிகளின் முதலாவது புத்திரரான- 30.10.1990 இல் பளை அரசினர் வைத்தியசாலையில் பிறந்த எனக்கு, பெற்றோரால் சூட்டப்பட்ட **றகீம்** என்ற பெயரினை இன்றுமுதல் **செந்தூரன்** எனப் பெயர் மாற்றம் செய்துள்ளேன் என இத்தால் சகலருக்கும் அறியத் தருகிறேன். **ப.செந்தூரன்.** *வல்லிபுரக் குறிச்சி, புலோலி, பருத்தித்துறை.*

நிறஞ்சனாஸ் சங்கானை

அர்ஜுன், மீனா, ஜோதிகா, மணிவண்ணன், நடடித்த

ரிதம்

காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே)
தினசரி இரவு. 8.45 (பு.நே)

THR LORD OF THE RING

(சி-1138)

ராஜா யாழ்ப்பாணம்.

12 ஆம் திகதிவரை

விக்ரம், ஜோதிகா, விவேக் நடித்த

தூள்

தினசரி 10.30, 2.30, 6.30.9.30

(சி-1137)

# பிறந்தநாள் வாழ்த்து

நோர்வேயில் வசிக்கும் *திரு.திருமதி வில்சன்* தம்பதிகளின் செல்வப் புதல்வர்கள்

## வினோஜன், அனோஜன்





ஆகிய இருவரும் தமது பிறந்தநாளை இன்று முல்லைத்தீவு அளம்பிலில் வெகு விமரிசையாக கொண்டாடுகின்றார்கள்.

வினோஜன், அனோஜன் ஆகிய இருவரையும் அன்பு அப்பா, அம்மா, அப்பம்மா, பாட்டி, அம்மம்மா, லண்டன் பெரியப்பா, பெரியம்மா, அன்புத்தங்கை நிவேதா, தம்பி றொனாட், லண்டன் அத்தை, மாமா, மச்சான் றொய்சன் மற்றும் மணல்காட்டில் வசிக்கும் அத்தைமார், மாமா, சித்தப்பாமார், அத்தான் டியூலன் கறின்சன், மச்சான் டியூரினி மற்றும் அளம்பிலில் வசிக்கும் மாமாமார், மாமிமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தி, அக்காமார், அண்ணாமார், மச்சாள்மார், மச்சான்மார் மற்றும் உற்றார் உறவினர் அனைவரும் மணற்காடு புனித அந்தோனியாரின் அருள் ஆசி பெற்று பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் சீரும்சிறப்புமாக நீடூழிவாழ்கவென வாழ்த்துகின்றனர்.

(சி.1135)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

தமிழ்க்குழுவினரின் போராட்டத்தையடுத்து

# கண்காணிப்பு குழு அலுவலகத்துக்கு மட்டக்களப்பில் பொலிஸார் பாதுகாப்பு!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரில் அமைந்துள்ள போர்நிறுத்தக் கண்காணிப்புக குழு அலுவலகத்திற்குப் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. அத்துடன், மட்டக்களப்பு நகர வீதிகளில் பொலிஸாரும் இராணுவத்தினரும் அடிக்கடி ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாக, மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் லசிந்த டி சில்வா தெரிவித்தார்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் சுட்டுக்கொல்லப்பட்ட புளொட் உறுப்பினரின் சடலத்தினை, கண்காணிப்புக்குழு அலுவலகத்துக்கு முன்னால் வைத்து, தமிழ் இயக்க உறுப்பினர்கள் மறியற் போராட்டத்தில் ஈடுபட்டதை அடுத்தே, கண்காணிப்புக்குழு காரியாலயத்திற்கு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

# தெற்கு அரசியல் கட்சிகளினை கூட்டணி விரைவில் சந்திக்கும்!

(கொழும்பு)

இடைக்கால நிர்வாகம் தொடர்பாகவும், தற்போதைய சமாதான முயற்சிகள் தொடர்பாகவும் - தமிழர் விடுதலைக் கூட்டணி, தென்னிலங்கை அரசியற் கட்சிகளைச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளது.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தின்போதே - மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதன் முதற்கட்டமாக, மிக விரைவில் பொதுஜன ஐக்கிய முன்னணியைச் சேர்ந்தவர்களைச் சந்தித்துப் பேச்சு நடத்துவதெனவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது. (01)

பிந்துனுவெவ படுகொலை வழக்கு

# மரண தண்டனை தீர்ப்பினை எதிர்த்து பொலிஸ் அதிகாரிகள் மேன்முறையீடு!

(கொழும்பு)

பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாமில் தமிழ் இளைஞர்களைப் படுகொலை செய்தமைக்காக, மரணதண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளிகள் இருவர்- இந்தத் தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்துள்ளனர்.

குற்றவாளிகளான எஸ்.ஜே.கருணாசேன, சப்இன்ஸ்பெக்ரர் ரி.ஆர். ரத்னாயக்க ஆகியோரே உயர்நீதிமன்றத்தில் மேன்முறையீட்டு மனுவைத் தாக்கல்செய்துள்ளனர்.

இந்தப் படுகொலைச் சம்பவத்தில், தாம் குற்றவாளிகள் அல்ல என்பது இவர்களின் விவாதமாகும். மேல்நீதிமன்றம், தமக்கு தண்டனை வழங்கிய விதத்தினை பிரதிவாதிகள் விமர்சித்துள்ளனர்.

தண்டனையை இரத்துச்செய்யக் கோரும் உத்தரவைப் பிறப்பிக்குமாறு அவர்கள் உயர் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்துள்ளனர்.

# தேசிய பாதுகாப்புத் தொடர்பாக நாடாளுமன்றில் இன்று விவாதம்

(கொழும்பு)

தேசிய பாதுகாப்புத் தொடர்பான சிறப்பு விவாதமொன்று, இன்று நாடாளுமன்றத்தில் இடம்பெறவுள்ளது.

நேற்று இடம்பெற்ற கட்சித் தலைவர்களுக்கிடையிலான கூட்டத்திலேயே, மேற்படி முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் - பொதுஜன ஐக்கிய முன்னணியைச் சேர்ந்தோர், நாட்டின் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்தனர். இவர்களின் இக்கோரிக்கையின் நிமித்தமே இன்று நாடாளுமன்றத்தில் தேசிய பாதுகாப்புத் தொடர்பான விசேட விவாதம் இடம்பெறவுள்ளதாகத் தெரிய வருகிறது. (01)

## காரைநகர்....

களால் வீட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸாருக்கு தகவல் கொடுக்கப்பட்டது.

## தலை ஒட்டிப்....

நுட்பமானதும், கடுமையானதும், நீண்டதுமான இந்த அறுவைச் சிகிச்சை நேற்றுக்காலை நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, சத்திர சிகிச்சைக்கூடத்தில் மெல்லிய இசை ஒலிபரப்புச் செய்யப்பட்டது.

1996 இல் இச்சத்திரசிகிச்சை அபாயகரமானது எனக்கூறி, ஜேர்மன் வைத்தியர்கள் கைவிரித்துவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.


## இந்திய சாஸ்திரியார் வருகை

முதன்முறையாக யாழ்ப்பாணப் புண்ணியபூமிக்கு வருகை தந்துள்ளார். பரம்பரை ஜோதிடர்

புகழ்பெற்ற S.N.குமாரசாமி அவர்கள்

கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத்தடை, தொழில் முன்னேற்றமின்மை, கல்வித் தடையா?, குழந்தைப் பாக்கியம், தீராத வியாதியா? மற்றும் எந்தப் பிரச்சினைகளுக்கும் நேரில் சந்திக்கவும்.

(காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை)

ஸ்ரான்லி லொட்ஜ்

T.P - 077 6080660 2226188

இல. 711, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். (யாழ்.இந்துக் கல்லூரிக்கு அண்மையில்)

(சி-1141)


கடற்தொழில் கூட்டுறவுச் சங்கத்தின்

# தொழிற்சாலை அனுமதி மறுப்புக்கு எதிராக சட்ட நடவடிக்கை முஸ்தீபு!

கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினரின் பனிக்கட்டித் தொழிற்சாலையை மீளப் புனரமைப்பதற்கு, படையினர் அனுமதி மறுத்து வருவதனை எதிர்த்து சட்ட நடவடிக்கை எடுப்பது தொடர்பாக, வடமாகாண கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினர் ஆராய்ந்து வருகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினருக்குச் சொந்தமான காணியிலேயே பனிக்கட்டித் தொழிற்சாலை அமைந்துள்ளது. இதனைப் புனரமைத்து, தொழிற்சாலையை மீண்டும் இயக்குவதற்கு படையதிகாரிகள் தொடர்ந்தும் அனுமதி மறுத்துவருகின்றனர்.

இது குறித்து பல்வேறு தரப்புக்களிடம் முறைப்பாடு செய்தபோதிலும், எதுவித சாதகமான பதிலும் இதுவரை கிடைக்கவில்லை.

எனவே - இப்பிரச்சினைக்கு சட்ட நடவடிக்கை எடுப்பதன் மூலமே உரிய தீர்வினைக் காணமுடியும் என்ற நோக்கில், வடமாகாண கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினர் பிரபல சட்டத்தரணிகளுடன் ஆராய்ந்து வருகின்றனர். (லி)

## நயினை பூந்தண்டிகை திருவிழா

நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய 11 ஆம் திருவிழாவான நாளை, புதன்கிழமை இரவு, பூந்தண்டிகைத் திருவிழா நடைபெறும். நயினை அரச ஊழியர்களின் உபயத்தில் இத்திருவிழா நடைபெறுகிறது.

## யு.எஸ்.எயிட் யாழ். நகரில்

யாழ்ப்பாணத்தில் 'யு.எஸ்.எயிட்' நிறுவனத்தின் பிராந்திய அலுவலகம் ஒன்று மிகவிரைவில் செயற்பட ஆரம்பிக்கவுள்ளது.

மேற்படி நிறுவனத்தின் செயற்பாடுகளை, யாழ்ப்பாணத்தில் விரிவுபடுத்துவதற்காகவே, இவ்வலுவலகம் ஆரம்பிக்கப்படவுள்ளது. (க)

## மட்டு ரயில் மீண்டும் நிறுத்தம்

மட்டக்களப்பு - கொழும்பு ரயில் சேவை நேற்றுக் காலை முதல் மீண்டும் தடைப்பட்டுள்ளது. ஏறாவூருக்கும், வாழைச்சேனைக்கும் இடையில் இனம்தெரியாதோரால் ஞாயிறு இரவு சிலிப்பர் கட்டைகள் அகற்றப்பட்டதாகவும், வந்தாறுமூலை மேற்கு லேக்ஹவுஸ் வீதிக்கு அருகிலேயே இந்த நாசவேலை இடம்பெற்றிருப்பதாகவும் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக, ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

## ஓமந்தை மத்திய கல்லூரிக்கு நிதி ஒதுக்கீடு

ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கை காரணமாக பலத்த சேதமடைந்த ஓமந்தை மத்திய கல்லூரியைப் புனரமைப்பதற்கு பத்து லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

மக்கள் மீளக்குடியேறுவதற்கு இராணுவத்தினர் அனுமதி வழங்கியதைத் தொடர்ந்து, மக்கள் இப்பிரதேசத்தில் மீள்குடியேறி வருகின்றனர்.

மீளக்குடியேறியுள்ள மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க இந்நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

# கேணல் பதுமனுடன் ரெலவ்சன் சந்திப்பு

கண்காணிப்புக்குழுவின் தலைவர் ரெலவ்சன் நேற்றுக்காலை திருகோணமலையில் புலிகளின் தளபதி கேணல் பதுமனைச் சந்தித்து ஒருமணிநேரம் பேச்சு நடத்தினார். இச்சந்திப்பு சம்பூரில் உள்ள புலிகளின் அலுவலகத்தில் நடைபெற்றது.

இச்சந்திப்பின் போது - குரங்குப்பாஞ்சான் பகுதியில் புலிகள் முகாம் அமைத்தமை குறித்தும், இப்பகுதியினுள் இராணுவம் அத்துமீறி நுழைவது குறித்தும் ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இச்சந்திப்பில் திருமலை அரசியற் பொறுப்பாளர் திலக் மற்றும் ராஜேஷ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## பல கோடி நிதிமோசடி...

அதேவேளை - யாழ்.அரசாங்க அதிபரின் வங்கிக்கணக்குகளும், அவை தொடர்பான ஆவணங்களும் பரிசீலனைக்கு உட்படுத்தப்படவிருக்கின்றன.

கடந்த 1999 ஆம் ஆண்டு முதல் 2002 ஆம் ஆண்டு வரையான காலபகுதியில், மக்கள் வங்கியின் யாழ். பிரதான வீதி கிளையினூடாக ஐம்பத்தியெட்டு காசோலைகள் யாழ். செயலகத்தினால் கையாளப்பட்டிருக்கிறது.

இக்காசோலைகளின் விபரங்களையும், இவை தொடர்பான அனைத்து ஆவணங்களையும் குற்றப்புலனாய்வுப் பொறுப்பதிகாரியிடம் உடனடியாக வழங்கும்படி - யாழ். மாவட்ட நீதிபதி ஆர்.ரி.விக்னராஜா, மக்கள் வங்கியின் முகாமையாளருக்கு நேற்றுப் பணிப்புரை விடுத்திருக்கிறார்.

குற்றவியல் சட்டத்தின் 124 ஆம் பிரிவின்படி- மேற்படி விசாரணைகளுக்கு அவசியம் என்று கருதப்படும் ஆவணங்கள் அனைத்தையும் பரிசீலிப்பதற்காக, குற்றப்புலனாய்வுப் பிரிவிடம் அவற்றை வழங்கும்படி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை செய்வதற்கு, மாவட்ட நீதிமன்றுக்கு அதிகாரம் உள்ளது.

நேற்று யாழ்ப்பாணம் வந்த கொழும்பு குற்றப்புலனாய்வுப் பொறுப்பதிகாரி வலப்பிட்டிய, தலைமையிலான மூன்று அதிகாரிகளைக் கொண்ட விசாரணைக்குழுவினர், மேலும் பல அதிகாரிகளை விசாரணைக்குட்படுத்தவுள்ளனர். அத்துடன், சம்பந்தப்பட்ட அனைத்து ஆவணங்களையும் இவர்கள் பரிசீலனைக்குட்படுத்தவுள்ளனர்.

புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் அ.ஜெயரட்ணம் - கடந்த மாதம் மூன்றாம் திகதி மேற்படி நிதிமோசடி தொடர்பாகக் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு முறைப்பாடு ஒன்றைச் செய்திருந்தார்.

இம்முறைப்பாட்டின்படி - குறிப்பிட்ட பதின்நான்கு கட்டட நிர்மாணப் பணிகளின்போது மட்டும் - நான்கு கோடி ரூபா மோசடி நடைபெற்றிருப்பது தெரியவந்துள்ளது.

மேற்படி நிதிமோசடி தொடர்பான குற்றப்புலனாய்வுப் பிரிவின் முதற்கட்ட அறிக்கை, அடுத்த மாதம் ஆறாம் திகதி யாழ். நீதிமன்றில் சமர்ப்பிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (க)

## அமெரிக்க...

தந்திருக்கும் இக்குழுவினர் - நேற்று யாழ்.அரச அதிபர் உட்படப் பல்வேறு தரப்புக்களுடன் கலந்துரையாடல்களை நடத்தியிருந்தனர்.

இன்றும் இக்குழுவினர் யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் செல்லவிருக்கின்றனர்.

அத்துடன் - யாழ். மாவட்ட அரச அதிபருடனான முக்கிய சந்திப்பு ஒன்றிலும் இவர்கள் பங்குபற்றவுள்ளனர் எனத் தெரியவருகின்றது. (க,லி,09)






இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 08.07.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.